# விவிலிய வினாடி வினா
## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசாரியா- சென்னை, விர்ஜின், வில்சன் மேரி, எதெல்பர்கா, ஜோஸ்பிட்டா மேரி- திருச்சி, மிரியம்,ஜீலி ராஜ், ஸ்டெல்லா ரோஸ்,ஜெயசேகரி -திண்டுக்கல், மேரி மௌரிஸ், ஜூ லி எலிசபெத்- தஞ்சாவூர், பிரியா, டோனெட்டல்லா அனஸ்தாசியாள், அனன்சியா மேரி, லூக்காஸ் மேரி, ஜார்லத் புஷ்பா, டோம்னா மேரி, பவுலின் மேரி - கும்பகோணம், விமல் மேரி, ஜசிந்தா, இரஞ்சிதம் - மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - கரூர், லோரா மேரி, வித்யா மேரி, ரூபெல்லா மேரி - தூத்துக்குடி, புஷ்பாமேரி-சிவகங்கை,சலேத் மேரி-திருப்பூர், பிரேமா - நெல்லை, சகாயம் - கடலூர்.

**பொதுநிலையினர்**

பிரான்சிஸ் பேசில், மேரி மார்கரேட், அனிருத் ஜோஸ்வா, ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், கிளாரா லூர்து மேரி, இமாக்குலேட் சோபியா, ஜெகரெட்சகன் ஜோசப், பாத்திமா, நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி; ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மிக்கேல்சாமி, புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர், கனிஷியஸ் விஷால், இம்மாக்குலேட் - சென்னை, சிப்ரியன்-தெளி, மேரி - இளையரசனேந்தல், சகாய ராணி, இருதய விஜிலா - திண்டுக்கல், ஜோஸ்பின் சகாய ராணி - கும்பகோணம், கிரிஜாமேரி - நெல்லை.

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



**அருட்சகோதரி. ஜசிந்தா - மதுரை**
**திருமதி. சகாய ராணி - திண்டுக்கல்**

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.








# ஜெபக்கோர்வை
## பதிப்பாசிரியர் பக்கம்

அ.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச


ஆகட்டும் இதழின் வாசகர்களே அன்னை மரியின் பக்தர்களே, ஜெபமாலை அன்னையின் திருவிழாவினைக் கொண்டாட நாம் ஆவலுடன் காத்திருக்கிறோம். அன்னை மரியாள் மீது கொண்டுள்ள பக்தியினைப் பெரும்பாலான மக்களிடம் கொண்டுபோய் சேர்த்ததில் ஜெபமாலையின் பங்கு என்பது முக்கியமானது. இந்த ஜெபமாலை என்பது சாதாரணமாக முத்துக்கள் கோர்க்கப்பட்ட மாலை மட்டும் கிடையாது. அதையும் தாண்டி அது உறவை இணைக்கும் பாலமும்கூட.

கடலில் இருக்கக்கூடிய எல்லா சிப்பிகளிலும் முத்துக்கள் இருப்பது கிடையாது. ஒருசில அதிஷ்ட சிப்பிகளில்தான் முத்துக்கள் இருக்கும். அதுபோல ஜெபமாலையில் இருக்கும் முத்துக்கள் அதிஷ்ட முத்துக்கள். அவை நம்முடைய ஜெபத்தை அன்னையின் பாதத்திலும் இயேசுவின் திருவடிகளிலும் பொண்டுபோய் சேர்க்கக்கூடிய வல்லமை கொண்ட முத்துக்கள். எவ்வாறு சிப்பிக்குள் இருக்கக்கூடிய முத்துக்கள் விலையுயர்ந்த முத்துக்களாய் இருக்கின்றதோ அதுபோல ஜெபமாலையில் இருக்கக்கூடிய முத்துக்களும் விலையுயர்ந்தவைதான் காரணம். மிகவும் விலையுயர்ந்த கடவுளின் அருளை நமக்கு பெற்றுத்தருகின்ற முத்துக்கள்தான் இவை. இந்த முத்துக்கள் ஏதோ ஏனோதானோவென்று குவிக்கப்பட்ட முத்துக்கள் கிடையாது. மாறாக அழகாக, சீராக கோர்க்கப்பட்ட முத்துக்கள்.

இந்த அழகான முத்துக்களை சீராக இணைத்திருக்கும் இந்த நூல் ஒரு சாதாரண நூல் கிடையாது. படகுகளை நிறுத்தி வைக்கும்போது



## உள்ளே




| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | 05 |
| மரியா செபமாலையின் அரசி | 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | 14 |
| செபமாலை என்ன தரும்? | 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | 24 |
| மாதா மன்றாட்டு மாலை | 25 |
| செபமாலையும் மீட்பின் மறைபொருளும் | 28 |
| அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் | 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | 32 |

அவை கடலிலோ ஆற்றிலோ அடித்துச் செல்லாமல் இருப்பதற்காக கட்டப்பட்டிருக்கும் கயிறுபோன்றதுதான் இந்த நூல். ஜெபமாலை ஜெபிக்கும்போது கவனம் சிதறாமல், மனம் அலைக்கழியாமல் இருப்பதற்கு உதவி செய்கின்ற ஆன்மீக நூல்தான் இந்த ஜெபமாலையில் பயன்படுத்துகின்ற நூல். இந்த ஜெபமாலையின் அழகே இந்தக் கோர்வையில்தான் பொதிந்துள்ளது. ஜெபமாலை ஜெபிப்பதன் அழகே இந்த ஜெபமாலையில் கோர்வையாக சொல்லப்படுகின்ற ஜெபங்களில்தான் இருக்கின்றது. இந்த ஜெபமாலை வெறும் ஒரு ஆபரண மாலையும் கிடையாது, ஆடம்பர மாலையும் கிடையாது. இது அன்பின் மாலை. கடவுள் எந்த அளவுக்கு தன்னுடைய மக்களை அன்பு செய்கின்றார் என்பதன் அடையாளமாகவும், மக்கள் எந்த அளவுக்கு கடவுளையும் அவருடைய தாயும் நம் தாயுமான அன்னை மரியாளை எந்த அளவுக்கு அன்பு செய்கின்றோம் என்பதன் அடையாளமாகவும் இருக்கின்ற அன்பின் மாலை. இந்த மாலையானது அருளின் மாலையும்கூடதான். கடவுளிடம் இருந்து அளவிடமுடியாத அளவுக்கு அருளினை வாரி வழங்கக்கூடிய அருளின் மாலையாகவும் அன்னை மரியாளின் பரிந்துரையினை பரிசீலிக்கும் பரிந்துரையின் மாலையாகவும் இருக்கின்றது.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஜெபமாலை ஜெபிப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து ஒவ்வொரு கத்தோலிக்க கிறிஸ்தவர்களும் தங்கள் வாழ்வின் அங்கமாக இந்த ஜெபமாலையை வைத்திருக்க வேண்டும். ஏன் இந்த ஜெபமாலை நம் வாழ்வின் அங்கமாக இருக்க வேண்டுமென்றால், ஒரு சாதாரண, படிப்பறிவுகூட இல்லாத சராசரி மனிதனின் ஆயுதமான அந்த ஜெபமாலை எல்லாதரப்பு மக்களுக்கும் நம்பிக்கைத் தருகின்ற மாலையாக மாறி இருக்கின்றது. அனைத்தையும் இழந்து விட்டேன் என்று விரக்தி நிலையில் இருப்பவர்களுக்குகூட நீங்கள் நம்பிக்கை மட்டும் இழக்காமல் இருந்தால் போதுமானது என்று நம்பிக்கையினைத் தருகின்ற அருளின் மாலைதான் இந்த ஜெபமாலை.

குடும்பமாக சொல்லப்படும் குடும்ப ஜெபமாலைக்கு இருக்கும் சக்தி என்பது மிகவும் வலுவானது. குடும்ப ஜெபமாலை குடும்பத்திற்கு ஏராளமான ஆசீர்வாதங்களை அள்ளிக் கொடுக்கும் அட்சயபாத்திரம் மட்டும் கிடையாது. அது குடும்பத்தை சுற்றிக் கட்டப்பட்டிருக்கும் கண்ணுக்குத் தெரியாத பாதுகாப்பு வளையம். திருக்குடும்பத்தின் வழிகாட்டுதலைக் கொண்டிருக்கும் முன்மாதிரி மாலைதான் இந்த ஜெபமாலை. இதன் முத்துக்கள் ஒன்றாக இருப்பதுபோல குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக இருந்து ஒற்றுமையோடும் சகோதரத்தோடும் வாழ வேண்டும் என்று நமக்கு கற்றுக் கொடுப்பது இந்த ஜெபமாலைதான்.

நம் கத்தோலிக்கத் திருஅவையில் பல ஆயிரம் ஜெபங்கள் இருக்கலாம். ஆனால் இந்த ஜெபமாலையில் சொல்லப்படுகின்ற ஆண்டவர் இயேசு கற்றுக் கொடுத்த ஜெபமாக இருக்கட்டும் அருள்நிறைந்த மரியே ஜெபமாக இருக்கட்டும் இந்த இரண்டு ஜெபங்களுக்கும் இருக்கும் ஆற்றல் அதிகம் இவை இரண்டும் நம்முடைய திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற ஜெபங்கள். ஆகவே நம்முடைய தேவைகளை நிறைவேற்றக் கூடிய வல்லமையும் இந்த ஜெபத்திற்கு உண்டு அதேநேரம் தீய சக்திகளை விரட்டக்கூடிய வல்லமையும் இந்த ஜெபங்களுக்கு உண்டு. ஆகவேதான் இந்த ஜெபமாலை நம்பிக்கை இழந்தவர்களுக்கு நம்பிக்கை அளிக்கிறது. பலம் குன்றியவர்களுக்கு பலம் அளிக்கிறது. எனவே இந்த ஜெபமாலை அன்னையின் திருவிழாவில் ஜெபமாலையின் முக்கியத்துவத்தை பாரெங்கும் பரப்புவோம்.

**ஜெபம் கடவுள் நமக்கு கொடுத்த வாய்ப்பு**
**ஜெபமாலை அன்னை நமக்கு கொடுத்த ஆயுதம்**





எனக்கு வேலையின்றி இருந்த போதும் மன்றாடி இரண்டு மாதத்தில் கிடைத்தது. இப்போது எனது மகன் ஜாய் ஜார்ஜ் ஒரு உலகளாவிய போட்டிக்கு சென்றான். அதில் வெற்றிபெற வேண்டும் என்று மரியன்னையிடம் கேட்டுக் கொண்டான். அவன் அதில் 8 ஆம் இடத்தை வெற்றி கொண்டான். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**டோரிதி – சாந்தோம்**

என்னுடைய மகள் கனடாவில் வசிக்கின்றாள். திருமணமாகி குழந்தை பாக்கியம் கிடையாது. நான் இங்கு வந்து அவர்களுக்காக ஜெபித்து, அவர்களுக்கு நேரலை ஆராதனையை அனுப்புவேன். அதன் பலனாக என்னுடைய மகள் இப்போது கருவுற்றிருக்கிறாள். இது அவளுக்கு 6-ம் மாதம். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மரிய புஷ்பம் – கண்ணகிநகர்**

எனது மகன் குடிக்கு அடிமையாகியிருந்தான். முதலில் இரவு மட்டும் குடித்தவர் இப்போது பகலிலும் குடித்தான் அதனால் காணாமல் போய்விட்டான். அன்னையிடம் நான் அழுது மன்றாடினேன். சில நாட்களுக்கு பிறகு உறவினர்கள் மூலம் கண்டு பிடித்தோம். இப்போது நன்றாகவும் எந்த குடிக்கும் அடிமையாகவில்லை. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜோஸ்வின் - சோழிங்கநல்லூர்**

என் மகனுக்கு திருமணமாகி குழந்தையில்லை. ஒரு கரு உருவாகி இரண்டு மாதங்களில் கலைந்து விட்டது. நான் என் மகனுக்காக மன்றாடினேன். அழுது மன்றாடினேன். ஆண்டவர் ஒரு அழகிய பெண் குழந்தையை கொடுத்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சகாய மேரி – கண்ணகிநகர்**

நான் கடந்த வாரம் கொடியேற்றத்திற்கு சென்றேன். அங்கு என்னுடைய நகையை தொலைத்து விட்டேன். அன்னையிடம் அழுது மன்றாடினேன். நகையும் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சுசித்திரா – வண்டலூர்**

எனக்கு திருமணமாகி 12 ஆண்டுகளாக குழந்தையில்லை. ஒருமுறை 6 மாதம் கருவுற்றேன். அப்போது குழந்தைக்கு ஆபத்து இருந்ததால் கருவை கலைத்தோம், ஆனால் சரியாக கருவை கலைக்கவில்லை. அதன்பின் என்னுடைய பக்கத்து வீட்டு சகோதரி எனக்கு ஜீவ அன்னையின் ஆலயம் குறித்து சொன்னார். இங்கு மூன்று மாதம் வந்து ஜெபித்தேன். இப்போது ஒரு அழகிய பெண் குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**கஸ்தூரி – கண்ணகிநகர்**

நான் 14 ஆண்டுகளாக இங்கு வருகிறேன். இந்த வருடம் ஜனவரி மாதம் இங்கு வந்து வேலைக்காக ஜெபித்தேன். பிப்ரவரி மாதம் எனக்கு ஒரு நல்ல வேலைக் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ராணி**

நான் ஒரு இந்து சகோதரி. நான் ஆலயத்திற்கு எதிராக துணிக்கடை வைத்திருக்கிறேன். கடையை திறப்பதற்கு முன்பாக ஆலயத்திற்கு வந்து ஜெபித்து செல்வேன். என்னுடைய மகனுக்கு திருமணமாகி பிரிந்து வாழ்கின்றான். அவனுக்கு ஒரு மகளும் உண்டு. அவர்கள் சேர்ந்து வாழ வேண்டும் என்று தொடர்ந்து மன்றாடினேன். ஆண்டவரின் அருளால் இப்போது இணைந்திருக்கிறார்கள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்சகோ. டேவிட் ஸ்டேன்லி மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**ஃபிரடிரிக் அனிசா – கடம்பாபுரம்**

நாங்கள் 2022 ஆம் ஆண்டு இந்த ஆலயத்திற்கு வந்தோம். அதற்கு முன்பாக திருமணத்திற்கு பிறகு மூன்று முறை கருவுற்று கரு கலைந்து விட்டது, ஒருமுறை கருவுக்கு சரியான வளர்ச்சி இல்லாததால் கருவை கலைத்தோம். 2022-ம் ஆண்டு மே மாதம் ஜீவ அன்னையிடம் அழுது செபித்தோம். அதே மாதம் கருவுற்றேன். குழந்தை கருப்பையில் வளராமல் கரு குழாயில் வளர்ந்தது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பிறகு 2023 ஆம் ஆண்டு ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**புஷ்பநாதன், நான்சி – கள்ளக்குறிச்சி**

ஜீவ அன்னையின் ஆலயத்திற்கு ஏழு வருடங்களுக்கு முன்பாக வந்தேன். அப்போது எங்களுக்கு திருமணமாகி ஐந்து வருடங்களாக குழந்தையில்லை. ஒவ்வொரு சனிக்கிழமைகளும் இங்கு வந்து ஆராதனையில் பங்கேற்போம். எங்களுக்கு ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜேசு மரியாள்**

எனக்கு திருமணமாகி இரண்டரை வருடங்களாக குழந்தை இல்லை, மரியன்னையின் புகழை அறிந்து இந்த ஆலயத்திற்கு வந்து ஜெபித்தேன். 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கருவுற்றேன். இப்போது குழந்தைக்கு எட்டாம் மாதம். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**டெல்பினா – தரமணி**

எனக்கு திருமணமாகி ஒரு வருடமாக குழந்தையில்லை. ஆண்டவரிடம் மற்றும் மரியன்னையிடம் அழுது மன்றாடினேன். எனக்கு ஒரு அழகிய குழந்தை பிறந்தது. இப்போது ஏழாம் மாதம். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**கண்ணன் – விருதுநகர்**

எனக்கு திருமணமாகி குழந்தையில்லை. என் நண்பர் இந்த ஆலயத்தைக் குறித்து சொன்னார். அடுத்த பிப்ரவரி மாதம் இங்கு வந்து மன்றாடினேன். நாங்கள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தோம். ஏப்ரல் மாதம் டெஸ்ட் எடுத்தபோது என் மனைவி கருவுற்று இருப்பதை அறிந்தேன். இப்போது என் மனைவிக்கு ஆறாம் மாதம். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**நிஷா**

எனக்கு 2015 ஆம் ஆண்டு குழந்தையில்லாமல் மன்றாடி குழந்தை பிறந்தது. அப்பொழுது நான் சாட்சி சொல்லவில்லை. அதன்பின்பு





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



## அகத்தை ஆய்ந்து அறிந்த மரியாள்

அது ஒரு ரயில் பயணம், பல ஆயிரம் மக்கள் பயணித்து கொண்டிருந்தனர். ரயிலின் ஒரு பெட்டியில் ஒரு அப்பாவும், 20 வயது மதிக்கதக்க மகனும் பயணித்து கொண்டிருந்தனர். அழகான இயற்கை சூழலின் நடுவே ரயில் போய்க் கொண்டிருந்தது. அப்போது அந்த இளைஞன் மிகவும் ஆச்சரியத்தோடு இயற்கையை ரசித்துக் கொண்டு வந்தான். அவன் அப்பா, அப்பா இங்கே பாருங்கள் மரங்கள் எல்லாம் பின்னோக்கி ஓடுகின்றன என்று ஆச்சரியத்தோடு சொன்னான். அவனுடைய அப்பாவும் அந்த இளைஞனைப் பாத்து ரசித்துக் கொண்டே வந்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெண்மணி சற்றுக் கோபமடைந்தாள், என்ன இது உங்கள் மகன் வளர்ந்து இருக்கிறான், மூளை இன்னும் வளரவில்லை, குழந்தையை போல பேசுகிறான், நீங்களும் அதை ரசிக்கிறீர்கள், அவனை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று கோபத்தோடு கூறினாள். அதற்கு அந்த அப்பா ஆம் மருத்துவமனையிலிருந்துதான் நான் அவனை அழைத்து வருகிறேன். பிறவியிலிருந்தே அவனுக்கு பார்வையில்லை, கடந்த வாரம்தான் அறுவைசிகிச்சை செய்து பார்வைப் பெற்றான். ஆகவேதான் அவன் இந்த உலகை பார்த்து ரசிப்பதை நானும் ரசிக்கிறேன் என்றார். அந்த பெண்மணிக்கு கண்களில் கண்ணீர் வந்து விட்டது.

நம் வாழ்வில் குறை சொல்வதற்கு ஒரு கூட்டம் முண்டி அடித்துக் கொண்டு வருவார்கள். ஒருவரின் சூழ்நிலையை முழுமையாக தெரியாமல் விமர்சனங்களை அடுக்குவார்கள். அன்னை மரியாள் நம் அனைவரின் உள்ளும் புறமும் அறிந்தவராக இருக்கிறார். கானாவூர் திருமண விழாவில் (யோவான் 2:1-12) திருமண வீட்டாரின் வறுமையும், இயேசுவின் மகிமையையும் அறிந்து செயல்பட்டார், ஆகவேதான் திருமண வீட்டாரின் விமர்சனத்திற்கு உள்ளாகாமல், புகழுரைக்கு உள்ளானார்கள். ஒருவரின் வளர்ச்சியில் பிறந்த குடும்பமும், சமூக பின்புலமும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஒருவரின் செயலைப் பார்த்து விமர்சனம் செய்யாமல் பின்புலத்தை அறிந்து வளர்ச்சிக்கு உதவிசெய்யும் மனப்பான்மையை வளர்க்க வேண்டும். அன்னையைப்போல் அகத்தை ஆய்வு செய்து புறத்தைப் பெருமைக்கு உரியதாக மாற்றுவோம்.

# மரியா செபமாலையின் அரசி

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
சேர்வைட் தலைமையகம், சென்னை.

## தொடக்கவுரை

அக்டோபர் மாதம் செபமாலை அன்னைக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. அவர் காட்சி கொடுத்த இடங்களில் எல்லாம் மிக எளிமையான செபமாகிய செபமாலையை செபிக்க கேட்டுக் கொண்டார். ஏழையான சிறுவர் சிறுமியரிடம் இவ்வேண்டலைப் பணித்தார். செபமாலை மிக சக்தி வாய்ந்த ஒரு ஆயுதம். திருஅவையிலும், துறவற சபைகளிலும் பொது நிலையினரின் வாழ்விலும் தனியாகவும் கூடியும் செபிக்கும் செபமாலையின் நேர்மறையான விளைவுகள் ஏராளம். திருஅவை நமக்கு வழங்கியிருக்கும் மறை உண்மைகளை ஆழ்ந்து தியானித்து உளமாறச் செபிக்கும் போது நாம் மெல்ல மெல்ல புனிதத்தில் வளர்கிறோம். இம்மறை உண்மைகள் நமது வாழ்வோடும் தொடர்புடையவை. அவை உணர்த்தும் பாடங்களை பயிற்சிக்கும்போது நாம் செபிக்கும் செபமாலை மிகவும் மகிழ்ச்சி தரக்கூடியதாக அமைகிறது.

## செபமாலையின் தோற்றம்

செபமாலை செபிக்கும் பழக்கம் திருஅவையில் 1300 ஆம் ஆண்டு முதலே இருந்து வந்துள்ளது என்பதை ஆண்ட்ரியாஸ் ெ□யின்ஸ் என்ற இறையியலாளர் உறுதிப்படக் கூறுகின்றார். திருஅவையில் 1571 ஆம் ஆண்டு துருக்கியர்களை எதிர்த்து கிறிஸ்தவர்கள் லெப்பென்றோ என்ற இடத்தில் பெற்ற வெற்றிக்குப் பின் வெற்றியின் மாதாவுக்கு இந்த விழா எடுக்கப்பட்டதாகவும், திருத்தந்தை 5-ம் பத்திநாதர் இதற்கு காரணமாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. திருத்தந்தை 13-ஆம் கிரகோரியார் 1573 ஆம் ஆண்டு, இதை, செபமாலை அன்னை விழாவாக கொண்டாடப் பணித்தார். அக்டோபர் மாதத்தில் 13ம் நாள் புனித பாத்திமா அன்னையின் இறுதிக் காட்சியை நினைவு கூறுகின்றோம். 1917 ஆம் ஆண்டு அன்னை மரியா அருளிய ஆறு காட்சிகளிலும் அவர் செபித்தார். ஆடு மேய்க்கும் மூன்று குழந்தைகளுக்கும் வானதூதர் வழியாக செபிக்க கற்றுக் கொடுத்தார். செபமாலை உலகமெங்கிலும் உள்ள கத்தோலிக்கரால் செபிக்கப்பட அவர் விரும்புகின்றார். இத்தகைய ஆற்றல் மிக்க செபத்தில் நாம் இறைமகன் இயேசுவின் வாழ்வையும் தியானிக்கும் போது உண்மையிலே அவரோடும் ஒன்றாகுகிறோம். மூவொரு இறைவனோடும் ஒன்றிணைகிறோம்.

## மறை உண்மைகள்

கிறிஸ்துவ சமயத்தின் மறை உண்மைகள் நம்பிக்கையாளர்களின் வாழ்வைச் சுற்றி அமைந்துள்ளது. இவற்றை இதயத்தால் அவர்கள் புரிந்து, உணர்ந்து, இறைவனை மக்கள் மத்தியில் வாசம் செய்பவராக அனுபவிக்கின்றனர். அன்றாட வாழ்வோடு, நமது சமுதாயத்தில் நடக்கும் நிகழ்வுகளோடு இணைத்துப் பார்க்கும்போது இவ்வுலகிலேயே விண்ணகத்தின் முன்சுவையை காணமுடியும். புனித அகஸ்தினார் ஒருநாள் கடற்கரையோரம் நடந்து கொண்டிருந்த போது சிறுவன் ஒருவன் தனது கைகளில் கடல் தண்ணீரை ஒரு குழிக்குள் ஊற்றுவதைப்





யாரையும் அதில் அடக்கம் செய்ததில்லை. (லூக் 23:53) என்ற இறைவார்த்தையை மேற்கோள்காட்டி அன்னை மரியாவின் திருவயிற்றோடு கிறிஸ்துவின் கல்லறையை ஒப்புமைப்படுத்துகிறார், புனித அகஸ்டின். அதாவது அன்னை மரியா கிறிஸ்துவுக்கு முன்பாகவும், கிறிஸ்துவுக்கு பின்பாகவும் யாரையும் கருத்தாங்கவில்லை. கிறிஸ்துவை மட்டுமே கருதாங்கினார். அதுபோல கிறிஸ்து அடக்கம் செய்யப்பட்ட கல்லறையும் கிறிஸ்து அடக்கம் செய்யப்படுவதற்கும் முன்பாகவும் அடக்கம் செய்யப்பட்ட பின்பும் யாரையும் உள் வாங்கவில்லை, யாரும் அடக்கம் செய்யப்படவில்லை என்று புனித அகஸ்டின் ஒப்புமைப்படுத்துகிறார்.

## கதவுகள் பூட்டப்பட்டு இருத்தல்

எட்டு நாட்களுக்குப்பின் அவருடைய சீடர்கள் மீண்டும் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடு இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தும் இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்று வாழ்த்தினார். (யோவான் 20:26) என்ற இறைவார்த்தையை மேற்கோள் காட்டி அன்னை மரியாவின் கன்னிமையை குறித்து கவனமாக ஒப்புமைப்படுத்துகிறார். அன்னை மரியாவின் கன்னிமைத் தன்மையை ஒன்றும் செய்யாமல் பாதிப்பை ஏற்படுத்தாமல் ஆண்டவர் இயேசு உள்ளே சென்று மனு உருவானார் என்று ஒப்புமைப்படுத்துகிறார். திருத்தூதர்கள் பயத்தினால் நிறைந்திருந்தபோது உள்ளே சென்று ஆண்டவர் இயேசு எவ்வாறு திடப்படுத்தினாரே அதைப்போலவே இங்கு அன்னை மரியாவின் கன்னிமை பழுதில்லாமல் உள்ளே சென்று அன்னை மரியாவின் நம்பிக்கையை திடப்படுத்துகிறார் என்று புனித அகஸ்டின் ஒப்புமைப்படுத்துகிறார்.

## வானத்தூதரின் வாழ்த்துரை

வானத்தூதர் இறைவார்த்தை விதைப்பவராக வருகிறார் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதையை பெறுபவராக அன்னை மரியாள் வருகிறார். நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகள் முளைத்து எவ்வாறு 30,60,100 மடங்காக பலன் தருகிறதோ அன்னை மரியாவும் இறைவார்த்தை தமது நல்ல நிலமாகிய உதிரத்தில் பெற்றுக் கொள்கிறார். எனவேதான் புனித அகஸ்டின் இந்த இறைவார்த்தையை வானத்தூதர்கள் விதைப்பதை ஒப்புமைப்படுத்துகிறார். அன்னை மரியா, இறைவார்த்தையை உள்வாங்கி தமது உதிரத்தில் வைத்து ஆழ்ந்து சிந்திப்பதை உறுதிப்படுத்துகிறார். அன்னை மரியா கிறிஸ்துவை நம்பிக்கையினால் தமது உள்ளத்தில் முதலில் கருத்தரித்தார் என்றும் பின்பு தமது உடலில் கருத்தரித்தார் என்று புனித அகஸ்டின் கூறுகிறார்.

எனவேதான் கத்தோலிக்க திரு அவையில் அன்னை மரியா- கிறிஸ்துவை உள் வாங்குவதற்கு முன்பாக கன்னியாக திகழ்ந்தார், கிறிஸ்துவை கருதரிக்கும்போது கன்னியாக திகழ்ந்தார், கிறிஸ்துவை பெற்றெடுக்கும்போதும் கன்னியாக திகழ்ந்தார், விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதும் கன்னியாக திகழ்ந்தார். இன்றும் என்றும் கன்னியாக திகழ்கிறார் என்று நம்பிக்கை கொள்ளுமாறு, திருஅவை அழைப்பு விடுக்கிறது.

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருட்பணி. டோம்னிக் ஜான் பால் ம.ஊ.ச
தஞ்சாவூர்

12



சென்ற மாத கட்டுரையில் அன்னை மரியாவின் வீரம் நிறைந்த நம்பிக்கையைப் பற்றிப் பார்த்தோம். இந்த கட்டுரையில் அன்னை மரியாவின் கன்னிமைத் தன்மைப் பற்றி புனித அகஸ்டின் கூறும் கருத்துக்களை ஆழமாக பார்ப்போம்.

1 **அன்னை மரியாவின் கன்னிமை**

அன்னை மரியாவின் கன்னிமையே ஆண்டவர் இயேசு என்று புனித அகஸ்டின் கூறுகிறார். அவர் இவ்வாறு கூறுவதன் காரணம்: அன்னை மரியா கிறிஸ்துவைப் பெற்றெடுத்தார், அன்னை மரியா கன்னிமையின் அரசி, யோசேப்பிடம் ஒப்படைக்கப்பட்டார், யோசேப்பு அன்னை மரியாவின் கன்னிமைக்கு பாதுகவாலாக இருந்தார். மரியா திருமணத்திற்கு முன்பு கன்னியாக இருந்தார், திருமணத்தின்போதும் கன்னியாக இருந்தார். கிறிஸ்துவை தமது உடலில் தாங்கியபோதும் கன்னியாக இருந்தார். தன்னுடைய மகனுக்கு தாய்பால் ஊட்டியபோதும் கன்னியாக இருந்தார் என்று அன்னை மரியாவின் கன்னித் தன்மையை புனித அகஸ்டின் ஏற்றுக் கொண்டு நம்பி அறிக்கையிருகிறார்.

**அன்னை மரியாவில் கரு உருவானார்**

புனித அகஸ்டின் அன்னை மரியாவின் திரு வயிற்றில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கருவாய் மலர்ந்தார் என்பதை பின்வருமாறு வியந்து விளக்குகிறார். மரியா-யோசேப்பு திருமணத்தால் இயேசு கருவாக உருவானார், அன்னை மரியாவின் கன்னிமைத் தன்மையை யோசேப்பு பாதுகாத்தார். எந்தவிதமாக பாதிப்பை ஏற்படுத்தாமல் என்று கூறுகிறார். இதைப்பற்றி Bertrand Buby தனது Mary of Galilee புத்தகத்தில் Fidelity in Marriage, Integrity in Sanctification என்று கவிதையாக கூறுகிறார். இங்குதான் புனித அகஸ்டின் கிறிஸ்துவின் இறைத் தன்மையைப் பற்றியும் எடுத்துரைக்கிறார். அன்னை மரியாவின் கன்னிமை தன்மையைப் பெருமைப்படுத்தும் விதமாக, ஆதாமின் இயல்பைப் பற்றி விளக்குகிறார். ஆதாம் மண்ணிலிருந்து உருவானார் கடவுளின் உயிர்மூச்சைப் பெற்றபோது மனிதன் ஆனார். அன்னை மரியாவும் உருவானார். அவர் கிறிஸ்துவைப் பெற்றபோது கன்னியானார் என்று ஆழமாக குறிப்பிடுகிறார். எனவேதான் புனித அகஸ்டின் அன்னை மரியா கிறிஸ்துவைப் பெற தயாரிப்பில் இருந்தபோது கன்னியாக இருந்தார், கிறிஸ்துவை தமது உடலில் பெற்றபோது கன்னியாக இருந்தார், கிறிஸ்துவைப் பெற்றெடுத்த போதும் கன்னிமை குறையாமல் இருந்தார் என்று குறிப்பிடுகிறார்.

**கிறிஸ்துவின் கல்லறையும் கன்னி மரியாவின் திருவயிறும்**

அவர் அவரது உடலை இறக்கி, மெல்லிய துணியால் சுற்றிப் பாறையில் குடைந்திருந்த கல்லறையில் வைத்தார். அதற்கு முன்பு





பார்த்து கேள்வி எழுப்பினார். இவ்வளவு நீரையும் இந்த குழிக்குள் சேர்த்துவிட முடியுமா? சிறுவன் கூறுவான் நான் கடல் நீரை இங்கு நிரப்பிவிடுவேன். ஆனால் நீ உனது அறிவால் மூவொரு இறைவனை புரிந்துகொள்ள முனைகின்றாய். அது நடக்கவே நடக்காது. நீ வெற்றி பெற மாட்டாய் என்று கூறி சிறுவன் மறைந்து விடுகின்றான். மறை உண்மைகளை இதயத்தால் நம்ப வேண்டும்.

புனித பவுலடியார் தனது மடல்களில் மிக அதிகமாக மறை பொருள் என்ற சொல்லாடலைப் பயன்படுத்துவார்.இதோ, ஒரு மறைபொருளை உங்களுக்குச் சொல்கிறேன். நாம் யாவரும் சாக மாட்டோம். ஆனால் அனைவரும் மாற்றுரு பெறுவோம்.(1கொரி:15:51) நற்கருணை ஒரு மறை பொருள். தூய தமதிருத்துவம் ஒரு மறைபொருள். ஆனால் இறைவன் இந்த மறைபொருள்களின் உண்மையை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றார். அவர் மனிதராக மனித அவதாரம் எடுத்தது ஒப்பற்ற மறை உண்மை. அதன் பொருள் என்ன? இறைவன் நம்மோடு இம்மானுவேலாக இறங்கி தங்கி நம்மோடு பயணிக்கின்றார். எனவே மறை உண்மைகள் புரிந்து கொள்ள முடியாத புதிர் அல்ல. அவற்றை நேசிப்போருக்கு இறைவன் அதன் உண்மை பொருளை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றார்.அவர்களும் அவர் அருகில் வருகின்றனர்.

**மகிழ்ச்சியின் மறை உண்மைகள்**

இங்கு நாம் பார்ப்பது அறிவிப்பு, சந்திப்பு, பிறப்பு, அர்ப்பணிப்பு, கண்டுபிடிப்பு. உலக மீட்பரின் பிறப்பு அறிவிப்பு ஒரு ஒப்பற்ற மகிழ்வான செய்தி. மாட்சி, ஆற்றல், புகழ் அனைத்தும் ஒருங்கே இணைந்த இறைவன், மனித கோலம் எடுக்கும் அந்த மீட்பின் திட்டத்தில் ஒரு உயர்ந்த கதாபாத்திரமாக, நமது சார்பாக அன்னை மரியா ஆம் என்று பணிகின்றார். இதனால் விண்ணகத்தில் மகிழ்ச்சி. மரியாவின் சந்திப்பு எலிசபெத்துக்கு மகிழ்ச்சியைத் தர அவர் தூய ஆவியாரால் அக்களிக்கின்றார். இயேசுவின் பிறப்பினால் ஏழை இடையர்களும், ஞானமிக்க அரசர்களும் மகிழ்கின்றனர். இயேசுவின் அர்ப்பணிப்பில் வயதுமிகுந்த சிமியோனும், அன்னாவும் மகிழ்ச்சியின் உச்சகட்டத்திற்குச் செல்கின்றனர். தேடுவோர் இறைவனைக் கண்டு கொள்வர். தேடுவோரைத் தேடியும் இறைவன் வருகிறார் என்பதற்ககேற்ப மரியாவும், யோசேப்பும் தேடினர். கண்டனர். மகிழ்ச்சி அடைந்தனர். நாமும் பிறருக்கு மகிழ்ச்சி வழங்குபவர்களாக மாற செபமாலையின் மகிழ்ச்சி நிறை மறை உண்மைகள் நம்மை அழைக்கின்றன.

**துயர்நிறை மறை உண்மைகள்**

இயேசுவின் பாடுகள் ஒலிவ மலையில் தொடங்கி கல்வாரி மலையில், கல்லறை குகையில் முடிவுறுகிறது. இயேசுவின் பாடுகளை நினைத்து நாம் துயறுர அவர் விரும்பவில்லை. மாறாக நமது துன்பங்களை பொறுமையோடு ஏற்க, பிறரது துன்பங்களில் பங்கேற்க இந்த மறை உண்மைகள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. இயேசுவையும் மரியாவையும் போன்று நாம் நற்செய்திக்காகத் துன்பங்களை மகிழ்வுடன் ஏற்கும் போது நாமும் இறைவனின் மீட்புத்திட்டத்தில் நமக்குரிய பங்கினைத் தருகிறோம். உலக ஈடேற்றத்தில் இணைகிறோம். துன்புறும் சகோதர சகோதரிகளோடு உணர்வால் ஒன்றிக்கிறோம். துயர்நிறை மறை உண்மைகளைத் தியானிக்கும் போது உலகில் பல இடங்களில் வறுமையில் உழலும் ஏழைகள், வேலை வாய்ப்பைத் தேடி அலையும் புலம்பெயர்ந்தோர், போர்களினால் பாதிக்கப்படுவோர் அனைவரோடும் ஒன்றிணைய வேண்டும்.

**மாட்சிநிறை மறை உண்மைகள்**

கிறிஸ்தவம் எப்போதும் மகிழ்வைத் தரும் ஒரு சமயம். இயேசுவின் பாடுகள், மரணம், கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது அனைத்தும் உயிர்ப்பு என்னும் பெரும் பாஸ்கா விழாவிற்குத் தேவையாக இருந்தன. இறப்பின்றி உயிர்ப்பு இல்லை. உயிர்ப்பு இன்றி மாட்சி இல்லை.ஆம் இயேசு மட்டுமல்ல, அவர் உயிர்ப்பார் எனும் ஆழ்ந்த நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்த மரியாவும் விண்ணக மாட்சியில் பங்குபெற அழைப்புப் பெற்றார். இறைவனின் படைப்புகளில், இந்த மானுடத்தில் மிளிரும் இறைமாட்சியைக் காணுவோம். விண்ணகத்தை நோக்கியே நமது கண்களை பதிய வைப்போம். செபமாலையின் அரசியாக விண்ணகத்திற்கும் மண்ணகத்திற்கும் இடையே மரியா வெற்றியுடன் திகழ்கின்றார். நாமும் இறைவனின் அடிமையாக பணிவாழ்வு வாழும் போது அவர் நம்மை உயர்த்துவார். மாட்சிநிறை மறை உண்மையைத் தியானிக்கும் நாம் அதே மாட்சியுடன் நமது அகமும் முகமும் மிளிர அன்னையின் அருளில் நனைவோம்.

**ஒளியின் மறை உண்மைகள்**

இயேசுவின் பணிவாழ்வை, பொதுவாழ்வை, படம் பிடித்துக் காட்டுகிறது ஒளியின் மறை உண்மைகள். உலகின் ஒளி நானே என்று கூறிய இயேசு இந்த மறை உண்மைகள் உணர்த்தும் ஒவ்வொரு நிகழ்விலும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றார். யோர்தான் ஆற்றில் mt h; ngwW **'அப்பா அனுபவம்'** வழியாக மூவொரு இறைவன் வெளிப்படுத்தப்பட்டார். புதிய இரசமாக தன்னை கானாவூரில் வெளிப்படுத்தினார். இறையரசு நம்மிடையே வந்துவிட்டது என்பதை அவரது போதனையில் வெளிப்படுத்தினார். உருமாற்றம் வழியாக தான் கடவுளின் மகன் என்பதை வெளிப்படுத்தினார். எந்நாளும் நான் உங்களோடு இருக்கின்றேன் என்ற உடனிருப்பை நற்கருணை வழியாக வெளிப்படுத்தினார். இவ்வனைத்தும் நமது வாழ்நாள் முழுவதும் உள்ளத்தில் இருத்தி தியானிக்க வேண்டியவை. **"நானே உலகின் ஒளி"** என்று கூறிய இயேசு, நமது உள்ளத்தில் ஒளியாக இருக்கின்றார். நீங்களும் குன்றின் மேல் இட்ட தீபமாக ஒளிர் விடுங்கள் என்று அழைக்கின்றார். பிற இனத்தவருக்கு இயேசு ஒளியாகத் திகழ்ந்ததுபோல நாமும் வாழும் சூழலில் நமது எடுத்துக்காட்டான வாழ்வினால் ஒளியாம் கிறிஸ்துவுக்கு சான்று பகர அழைக்கின்றார்.

**நிறைவுரை:**

நாம் செபமாலை செபிக்கும்போது நமது உதடுகள் அசைந்த போதும் நமது சிந்தனைகள் மறை உண்மைகளில் பதியும்போது நமது வாழ்வில் பெரும் மாற்றங்களை உணர்கின்றோம். மரியாவின் வாழ்வில் இதுதான் நடந்தது. அவர் அனைத்து நிகழ்வுகளையும் தனது உள்ளத்தில் பொக்கி'மாக பொதிந்து தியானித்து வந்தார். அந்த நிகழ்வுகள் வழியாக இறைவனின் குரல், விருப்பம், திட்டத்தை உய்ந்துணர்ந்தார். எனவே அனைத்து இன்ப துன்ப வேளைகளில் அமைந்த மனதுடன், பணிவுடன், துணிவுடன் விளங்கினார். இறைவனின் அன்பு மகளாய்த் திகழ்ந்தார். இறைவனும் அவரை விண்ணக மண்ணக அரசியாக உயர்த்தினார். நம்மையும் இவ்வாறு உயர்த்த இறைவன் விரும்புகிறார். அழைக்கின்றார்.ஏனெனில், இயேசுவே, இறைவார்த்தையின்படி வாழ்பவரே தனது தாயும் சகோதர சகோதரிகள் என்று கூறுகின்றார். எனவே, நாமும் மரியாவைப் போன்று பேறு பெற்றோர் கூட்டத்தில் இணைவோம். நமது திருமுழுக்கினால் அரச குலத் திருகூட்டத்தைச் சேர்ந்த நாம் அதே மாண்புடனும் மகிமையுடனும் இவ்வுலகிலும் மறு உலகிலும் இருக்க செபமாலையின் அரசியாகிய மரியா நம்மை வழிநடத்துவாராக.





மகிழ்ச்சியின் ரகசியங்கள் திங்கள், சனிக்கிழமைகளில் சொல்கிறோம். முதல் 10 மணிக்கு கபிரியேல் வானதூதர் மரியாவிடம் தூய ஆவியினால் அவர் கருவுற்று ஒரு மகனை பெறுவார் என அறிவித்தது. (லூக் 1:26-38), இரண்டாம் பத்து மணிக்கு மரியா எலிசபெத்தை வாழ்த்தியது (லூக் 1: 39-45) 3-வது 10 மணிக்கு இயேசுவின் பிறப்பு (லூக் 2:4-7)

4-வது 10 மணிக்கு குழந்தை இயேசுவை காணிக்கையாக ஒப்புக்கொடுத்தது (லூக் 2:22-24) 5-ம் 10 மணிக்கு பாலகன் இயேசு 12-ம் வயதில் காணாமல் போய் 3 நாட்களுக்கு பின் கோவிலில் கண்டது (லூக் 2:41-50) போன்ற நிகழ்வுகளை நாம் தியானிக்கும்போது இயேசுவின் குழந்தை பருவ நிகழ்ச்சிகள் நம் மனதில் ஆழமாக பதிகிறது.

ஒளியின் தேவ ரகசியத்தில் 1-ம் 10 மணிக்கு இயேசுவின் திருமுழுக்கு (மத் 3:13-17) (மாற் 1:9-11) (லூக் 3:21,22) 2-ம் 10 மணிக்கு கானாவூர் கல்யாணத்தில் தன் அன்னையின் பரிந்துரையால் தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றியது (யோவா 2:1-11) 3-ம் 10 மணிக்கு இயேசுவின் மலைப்பொழிவ- இறையாட்சி போதனை (மத் 5:1-12, லூக் 6:20-23) 4-வது 10 மணிக்கு இயேசு தாபோர் மலை மீது தன் பிரியப்பட்ட 3 சீடர்களுக்கு தோற்றம் மாறி தன்னுடைய சுவர்க்க மகத்துவத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துதல் (மத் 17: 1-13) (மாற் 9:2-13) (லூக் 9:28-36) 5-வது 10 மணிக்கு பாஸ்கா இரவு உணவின்போது தன் சீடர்களின் பாதங்களைக் கழுவுவது. நற்கருணை வழிபாட்டை ஏற்படுத்துதல் (யோ 13:1-10)(மத் 26:26-30) (மாற் 14:12-16) (லூக் 22:14-20) (1 கொரி 11:23-25) இவைகளை தியானிக்கும்போது இயேசுவின் வெளி உலக வாழ்க்கையின் 3 வருட நற்செய்தி பணிகளை அறிந்து கொள்கிறோம்.

துன்ப தேவ ரகசியத்தில் இயேசு ஒலிவ மலையில் தனக்கு ஏற்பட இருக்கும் துன்ப பாடுகளை நினைத்து இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தபோது அவரது வியர்வை பெரும் ரத்தத் துளிகளைப்போல் தரையில் விழுந்ததை (லூக் 22:44) முதல் 10 மணிக்கும் பிலாத்துவின் அரண்மனையில் இயேசுவை கசையால் (சாட்டையால்) அடிப்பதை (மத் 27:26) (மாற் 15:15),(யோ 19:1) 2-ம் 10 மணிக்கும் 3-ம் பத்து மணிக்கு இயேசுவின் தலையில் முள் முடி வைப்பதும் (யோ 19:2),(மாற் 15:17), (மத் 27:29) 4-வது 10 மணிக்கு இயேசு சிலுவையை சுமந்து கொண்டு மண்டை ஓடு இடத்திற்கு (கொல்கதா) கூட்டிச் செல்லப்படுவதையும் 5-வது 10 மணிக்கு தன் தாயின் கண் முன்பாக இயேசுவை சிலுவை மரத்தில் அறைந்ததும் (மாற் 15:40),(யோ 19:25) நாம் தியானிக்கும்போது நம் பாவங்களை ஏற்றுக்கொண்டு நாம் மீட்பு அடைய தன் உயிரையே ஈந்த இயேசுவையும் உலக மீட்புக்கு தன் ஒரே மகன் இயேசுவே பலி பொருள் என உணர்ந்து அவரையே நமக்கு தந்த வியாகுல அன்னையையும் அவரது வேதனைகளையும் நம் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிய செய்கிறது. இது செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் சொல்லப்படும்.

மகிமையின் தேவ ரகசியத்தில் முதல் 10 மணி ரகசியத்தில் இயேசுவின் உயிர்ப்பையும் (மத் 28:6,9,17,18) (மாற் 16:4,12,14) (லூக் 24:15,30,31,36) (யோ 20:16,19,26,27) 2வது 10 மணி ரகசியத்தில் இயேசு விண்ணேற்றம் (லூக் 24:50-53) (தி.ப 1:1-11) 3வது 10 மணி ரகசியத்தில் இயேசு விண்ணேற்றம் அடைந்த 10-ம் நாள் இயேசுவின் தாய் மரியா திருச்சீடர்கள் 12 பேர் மற்றும் சில பெண்களோடு சுமார் 120 பேர் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தபோது பரிசுத்த ஆவி (தூய ஆவி) அவர்கள் மேல் இறங்கி வருவதையும் (தி.ப 2:1-12) நாம் தியானிக்கிறோம். மகிமை ரகசியத்தில் வரும் 3வது 10 மணிகள் வரை விவிலியத்தில் நான்கு

தொடர்ச்சி 13-ம் பக்கம்



## செபமாலையும் மீட்பின் மறைபொருளும்

திருமதி. ரோஸி ஜார்ஜ், பூம்பொழில் நகர், சென்னை

ஒன்பதாம் நூற்றாண்டில் அயர்லாந்தில் வாழ்ந்து வந்த கிறிஸ்தவ துறவியர்கள் தாங்கள் வாழும் சொந்த ஊர்களில் இருந்து புறப்பட்டு மிகத் தொலைவிலுள்ள ஒரு தனிமையான இடத்திற்கு சென்று அங்கே ஆசிரமங்களை அமைத்துக் கொண்டு ஒரு இறைக்கூட்டமாய் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தங்கள் இறைவழிபாட்டின்போது 150 திருப்பாடல்களையும் ஆர்வத்துடன் பாடி ஜெபித்து வந்தனர். அவ்வழியாக பயணம் செய்த மக்கள் அவற்றைக் கேட்டு மகிழ்ந்து வந்தனர். துறவறத்தாரின் தூய வாழ்வும், பக்தி முயற்சிகளும், பிற மனிதர்களோடு காட்டும் அன்பும் அவர்களை கவர்ந்தது. தாங்களும் அவர்களோடு இணைந்து திருப்பாடல்களை பாட விருப்பம் தெரிவித்தனர்.

ஆனால் அவர்களில் பலர் கல்வியறிவு இல்லாதவர்களாய் இருந்ததால் முதலில் அவர்களுக்கு கர்த்தர் கற்பித்த "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே" என்ற மன்றாட்டை 150 முறை சொல்லுமாறு கற்றுக் கொடுத்தனர். 150 முறை எண்ணிக்கை தவறாமல் சொல்வதற்காக 150 சிறு சிறு கற்களை எடுத்து வைத்துக் கொண்டனர். ஆனால் அவர்கள் செல்லும் இடங்களில் எல்லாம் கற்களைத் தூக்கிக் கொண்டு செல்வது சிரமமாய் இருந்ததால் ஒரு நீளமான கயிற்றை எடுத்து அதில் 50 முடிச்சுக்களை போட்டு வைத்துக்கொண்டு 3 முறை அதை பிடித்து சொல்லி வந்தனர். கிறிஸ்தவ துறவறத்தாரின் இவ்வழிமுறையை பிற்கால கிறிஸ்தவ மிஷனரிகள் (நற்செய்தி அறிவிப்பாளர்கள்) பல இடங்களுக்குச் சென்று பரப்பினர். 12-ம் நூற்றாண்டு தொடக்கத்தில் "அருள் நிறைந்த மரியே வாழ்க" என்ற கபிரியேல் வானதூதரின் வாழ்த்துரையும் சேர்க்கப்பட்டது. சிறிது காலத்திற்கு பிறகு மரியாவை எலிசபெத் தூய ஆவியால் நிரப்பப்பட்டு கூறிய "பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே" என்ற வார்த்தைகளும் சேர்க்கப்பட்டன.

15-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு கார்த்தூசியன் துறவி அதை 15 தசம பாகங்களாக (பத்து பத்தாக) பிரித்து ஒரு மாலை போல் ஆக்கினார். டோமினிக் துறவி ஒவ்வொரு 10 மணிகளுக்கும் நடுவில் ஒரு பெரிய மணியை கட்டினார். 16-ம் நூற்றாண்டில் "அர்ச்சிஷ்ட மரியே" என்ற பிற்பகுதியும் சேர்க்கப்பட்டது. மக்கள் ஆர்வத்தோடு ஜெபமாலை செய்ததால் விவலிய வசனங்களும் அதில் சேர்க்கப்பட்டன. இயேசுவின் வாழ்க்கையை 3-ஆக பிரித்து மகிழ்ச்சி, துன்பம், மகிமை இவற்றை குறிப்பிடும் வாசகங்களை ஒவ்வொரு 50 மணிகளிலும் சேர்த்து தியானிக்கும் முறை ஏற்படுத்தப்பட்டது. மணிகளின் தொடக்கமும் முடிவும் அறிய மேலும் 10 மணிகள் சேர்க்கப்பட்டது. அக்டோபர் 16 2002-ம் ஆண்டு அன்றைய திருத்தந்தை 2-ம் ஜான்பால் அவர்கள் இயேசுவின் கடைசி 3 வருட வெளி உலக வாழ்வின் நிகழ்வுகளை ஒளியின் தேவ ரகசியங்களாக மேலும் 5 பத்து மணிகளை இணைத்தார்.





# அன்னையின் 70 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## அன்னையின் திரு இரத்தத் திருத்தலம், ரே – இத்தாலி - 2

(Madonna del sangue, Re – Italy)

இயேசு திருஇரத்தம் பற்றி அறிந்துள்ளோம். நம் பாவங்களுக்கு கழுவாயாக சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தம் அவரது தாயின் உதிரத்திலிருந்து உருவானது என்பது திண்ணமே. ஆனால், அன்னையின் திரு இரத்தத்தை பற்றி இதுவரையில் யாரும் பேசியதாக நான் கேள்விப்பட்டதில்லை. எனவே, இந்தத் திருத்தலத்தை பற்றி கேள்விப்பட்டவுடன் ஆச்சரியமாக இருந்தது. என் ஆண்டு தியானத்திற்காக ரே சென்ற பொழுது, இத்திருத்தலத்தை தரிசிக்கும் வாய்ப்பும், அங்கு திருப்பலி நிறைவேற்றும் பாக்கியமும் கிடைத்தது.

இன்று நாம் காணும் வானுயர்ந்த திருத்தலம் கட்டி முடிக்கப்பட்டு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு ஆகிறது. ஐநூறு ஆண்டுகள் பழமையான இந்த புதுமை நிறை அன்னையின் திருஓவியம் இருந்த சுவர் ஏறக்குறைய பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே இங்கு இருந்த பழைய ஆலயத்தின் சுவராகும். அன்னையின் திருஓவியத்தில் நடந்த புதுமையை விளக்கும் ஆளுநர் தனியேலே கிரெப்பியின் சாசனம், இப்புதுமைமிகு ஓவியத்தை பாதுகாப்பாக வைக்கவும், அதிமிகு வணக்கதோடு வணக்கவும் ஒரு பரந்து விரிந்த ஆலயம் எழுப்பபட வேண்டும் என்ற மக்களின் விருப்பத்தை வெளிப்படுத்துகிறது. ஆளுநரின் சாசனத்தை பிரதிபலிக்கும் விதமாக ஆயர்களின் சுற்றுமடல்களிலும் ஆலயம் கட்டப்படவேண்டிய அவசியம் குறித்து தொடர்ந்து எழுதப்பட்டு வந்தது. கி.பி. 1596ஆம் ஆண்டு பங்கு விசாரணைக்ககாக முதன்முறை வந்த ஆயர் பஸ்காபே, அன்னையின் திருஇரத்த ஓவியத்தின் வணக்கத்தை அங்கீகரித்தார். மேலும் ஆளுநரின் சாசனத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். அதன் தொடர்ச்சியாக அத்திருஓவியத்தை தாங்கிய சுவரை மையமாக வைத்து ஒரு சிற்றாலயம் எழுப்பப்பட்டது. ஆலயத்தின் தெற்கே மூன்று மணிகளை கொண்டு மணிக்கூண்டும் எழுப்பட்டது.

இந்த ஆலயத்தின் அடிக்கல்லானது கி.பி. 1600ஆம் ஆண்டு நாட்டப்பட்டு முப்பது ஆண்டுகள் ஆலயப்பணிகள் நடைபெற்றன. கடுமையான பொருளாதார சிக்கல்களினால் ஆலய கட்டுமான பணிகள் மெதுவாகவே நடைபெற்றன. மறைமாவட்டம் முழுவதிலும் ஆலயப் பணிக்காக நன்கொடைகள் திரட்டப்பட்டன. ஆயரின் உத்தரவின்படி எல்லா ஆலயங்களிலும் இரண்டு சிறப்பு காணிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆலயக் கட்டுமான பணிகளுக்கான பொருளீட்டுவதற்காக ஆலயத்திற்கு சொந்தமான நிலங்களும் விற்கப்பட்டன. ஆலயத்தின் கட்டுமான பணிகள் மெதுவாக ஆனால் சீராக முன்னேறி கொண்டிருந்தது. ஆயர் பஸ்காபே நன்கு வளர்ந்திருந்த ஆலயக் கட்டுமானத்தை கி.பி. 1609ஆம் ஆண்டு தன்னுடைய மூன்றாம் பங்கு விசாரணையில் கண்டு பெரிதும் மகிழ்ந்தார். ஆனால், ஆலயம் நிறைவுறுவதை அவரால் காண இயலவில்லை. பல்வேறு தடைகளை தாண்டி கட்டிமுடிக்கப்பட்ட ஆலயம், கி.பி. 1627ஆம் ஆண்டு ஆயர் வோல்பி அவர்களால் அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது. இவ்வாலயம் இன்றும் உள்ளது. அக்காலக்கட்டத்தில் மலைப்பாங்கான அப்பகுதியில் இவ்வாலயம் பெரிய ஆலயமாக கருதப்பட்டது. அனைத்து பகுதிகளிலிருந்தும் மக்கள் திருயாத்திரையாக வரத் தொடங்கினர். ஆன்னையின் திருஓவியத்தை பங்கின் பாதுகாவலரான மௌரிசியோவின் திருஉருவத்திற்கு மேல் வைக்க பலமுயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால், அத்தகைய நடவடிக்கைகள் ஓவியத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் என்று அறிந்தவுடன் அம்முயற்சிகள் கைவிடப்பட்டன.

அழகுற வடிவமைக்கப்பட்ட புனித மௌரிசியோவின் அற்புதமான சிரூபம் இந்த ஆலயத்தில் இன்றும் உள்ளது. அச்சிரூபமானது பளிங்கு கற்களால் அழகுற வடிவமைக்கபட்ட மேடையில் நிறுவப்பட்டுள்ளது. அச்சிரூபத்தைச் சுற்றி, அப்பகுதியில் புகழ்பெற்று விளங்கிய ஓவியர் கார்லோ மெல்லோரியோ என்பவரால் வரையப்பட்ட ஓவியம் அலங்கரிக்கிறது. அவ்வோவியத்தில் தந்தையாம் கடவுள் வானதூதர் புடைசூழ கனிவுடன் பூவுலகை நோக்குவது போலும், அவரைச் சுற்றி நான்கு நற்செய்தியாளர்கள் இருப்பது போலவும் வரையப்பட்டுள்ளது.

விசென்சோ பள்ளத்தாக்கில் உள்ள ஆலயங்கள் இக்காலக்கட்டத்தில் பல்வேறு விதமான ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டதை போன்று இவ்வாலயமும் அலங்கரிக்கப்பட்டது. கி.பி. 1699-1703 காலகட்டத்தில் வானுயர்ந்து நிற்கும் மணிக்கோபுரமானது கட்டப்பட்டது. அக்கோபுரம் இன்றும் நிலைத்து நின்று, அக்கால கட்டடி கலைக்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது. கி.பி. 1773ஆம் லொம்பார்தோ கலைப்பாரம்பரியத்தின் அடிப்படையில் பளிங்கு கற்களால் ஆன பலிப்பீடம் எழுப்பட்டது. அன்னையின் திருஓவியத்தை நோக்கி எழுப்பட்ட இப்பலிப்பீடத்தில் அன்னையின் திருஓவியத்தின் இருபுறமும் அன்னையை நோக்கிய வணக்கம் செலுத்தும் வண்ணமாய் நிற்கும் இரண்டு வானதூதர்களின் உருவங்கள் தத்ரூபமாக வடிக்கப்பட்டுள்ளன. மேலும், ஒரு வானதூதர்களின் அணியானது அன்னைக்கு கிரீடம் சூட்டும் வண்ணமாக வடிக்கப்பட்டுள்ளது. அன்னையின் திருஓவியத்திற்கு





முடிவெடுத்தாள். அதன்விளைவாக மனிதன் வாழ்வு இழந்தான். விளைவு மனித குலமே கறைபட்டு விட்டது. ஏவாளின் முடிவு இறைச்சாயல் படைத்த மனிதன் முகமிழந்தவனாய்த் திரிந்தான்.

ஒரு பெண்ணின் முடிவால் முகமிழந்த மனிதன் மற்றொரு கன்னியின் முடிவால் முகவரி பெறுகின்றார் ஆணாதிக்கமும் பெண்ணடிமையும் யூத சமுதாயத்தில் புற்று நோயாக இருந்தது. குருட்டுச் சட்டங்கள் மகளீரை முடமாக்கியது. இந்த அடிமைச் சங்கிலிக்குள் இருந்துதான் ஒரு பெண் புயலாக புறப்படுகின்றாள். இறைமகன் இயேசுவுக்கே தாயாக உருவெடுக்கின்றாள். மாட மாளிகை மங்கையர்கள் மடிதிறந்து நிற்கிற வேளையில் தனது கருப்பையில் கடவுள் மனுவுரு ஆகட்டும் என்று கூறி ஆச்சரியத்தின் அன்னை ஆகின்றார் மரியா. ஆண்டவரின் அடிமை மரியா எலிசபெத்தை சந்திக்கின்றபோது எலிசபெத் என் ஆண்டவரின் தாய் என்று கூறி இது கனவா? நனவா? என்று ஆச்சரியத்தை வெளிப்படுத்துகின்றார்.

மரியாவை ஆச்சரியத்தின் கன்னி என்று நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த நிசாவைச் சார்ந்த கிரகோரியார் கூறுகின்றார். அதாவது ஆண்டவரின் தூதர் மோயிசனுக்கு காட்சி கொடுத்தபோது எரிந்து கொண்டிருந்த முட்புதர் தீய்ந்து போகவில்லை, கரிந்து போகவில்லை.(வி.ப 3. 2-3). அதுபோலவே அன்னை மரியா கன்னி கருத்தாங்கி இயேசுவை பெற்றெடுத்தாலும் என்றும் கன்னியாக கன்னித்தன்மையோடு கறைபடாமல் இருக்கின்றார். இவ்வாறு ஒரு சாதாரணப் பெண் அசாதாரணப் பெண்ணாக ஆச்சரியத்தின் அன்னையாக அரியணை ஏறுகின்றார்.

அன்னை மரியாவைப் பின்பற்றிதான் நாம் அனுதினமும் செபமாலை செபிக்கின்றோம். போர்க்காலத்தில்தான் அமைதி வேண்டி செபமாலை செபித்து வந்தனர். வாள்களும், கத்திகளும் இரத்தம் குடித்த இடத்தில் வெறும் வாய் செபத்தால் அமைதி ஏற்படுத்திய செபமாலை ஆச்சரிய அன்னையின் வாழ்வை நமக்கு நினைவூட்டுகிறது.

வயிற்றில் தெய்வம் பிறக்காதா என ஏங்கினர். கோவில் கருவறையில் தஞ்சம் அடைந்தால் தெய்வம் தங்கள் கருவறையில் தஞ்சம் அடைவார் என பெண்கள் கோவிலுக்கு படையெடுத்தனர். இவை அனைத்தும் மனிதக் கணக்கு.

ஆனால் தெய்வக் கணக்கு ஒன்று உள்ளது. தகுதியற்றவரை தகுதியாக்குவது, கடைநிலையில் உள்ளவரை கருவியாக்குவதுதான். வாழ்க்கையில் எதார்த்தத்தை நோக்குகையில் அன்னை மரியா தகுதியானவர் கிடையாது. அவர் சமுதாயத்தில் பெரும்புகழ் பெற்றவரல்ல. ஆணாதிக்கம் நிறைந்த சமுதாயதத்தில் ஒரு பெண்ணடிமையாக மரியா காணப்படுகின்றார். யூத சமுதாயத்தில் ஒரு பெண் இருக்கின்றார் என்று அடையாளம் காட்டுவது இரண்டு கூறுகள். 1 கணவன் இருக்க வேண்டும். 2 குழந்தை இருக்க வெண்டும். இதுபற்றி லூக்கா 1.56 –ல் தெளிவாக பார்க்கின்றோம். மரியா ஏறக்குறைய மூன்று மாதங்கள் எலிசபெத்தோடு தங்கிய பின்பு தம் வீடு திரும்பினார். அதாவது யோசேப்போடு மண ஒப்பந்தம் ஆனபிறகும் மரியா இன்னும் அவருடைய வீட்டோடு சொந்தமாக இணையவில்லை. இதன்மூலம் தனது கணவனின் சொத்தில் மரியாவுக்கு எந்த உரிமையும் இல்லை. ஆக மொத்தம் சமுதாயத்தில் முகவரி இழந்த பெண்தான் மரியா.

மரியாவை ஈன்றெடுத்த மண்ணும் முகவரி இழந்து வரைபடத்தில் காணாமல் போன கற்பூர நகரம்தான் நாசரேத்து. இதன் முக்கியமின்மைக்கு சான்றாக சில: நாசரேத்துப் பற்றி பழைய ஏற்பாட்டிலோ, சட்ட நூலாகிய தோராவிலோ, தோராவின் விளக்கமாகிய மினாவிலோ, மினாவின் விளக்கமாகிய தால்மூட்டிலோ ஒரு குறிப்புக்கூட இல்லை. புதிய ஏற்பாடு மட்டும் குறிப்பிடும் நகரம். அதுவும் நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வர முடியுமோ (யோவான் 1.46) என்கின்ற அளவுக்கு குப்பையாகக் கருதப்பட்ட நகரம்தான் நாசரேத்து.

முகவரியற்ற ஊரிலிருந்து முகம் தெரியாத மங்கையான மரியா கடவுளின் பார்வையில் அருள் நிறைந்தவளாக (லூக் 1.28) எவ்வாறு தென்பட்டார்? ஒரு கன்னியால் (ஏவாள்) இருளடைந்த உலகம், மற்றொரு கன்னியால் (மரியா) அருள் நிறைந்ததாக மாறுகிறது. பழைய ஏற்பாட்டில் கடவுளின் வார்த்தையா – சாத்தானின் வார்த்தையா? யமனின் கட்டளையா – பாம்பின் சூழ்ச்சியா எது வேண்டும் என்னும் சூழலில் இரண்டிற்கும் இடையே முதல் கன்னி ஏவாள்







**அன்னையின் பலிப்பீடம்**

மேல், அன்னை மரியாள் என்றும் கன்னி விளக்கும் “மூன்று வாடா மலர்களின்” ஓவியம் ஒன்றும் வரையப்பட்டுள்ளது. அம்மலர்களின் கீழ், “ஆண்டவரின் அரும்பெரும் செயலைக் கண்டு போற்றிப்புகழ வாருங்கள்” என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது. இந்த ஓவியத்திற்கு மேல் தூய ஆவியானவரைக் குறிக்கும் புறாவின் அழகான ஓவியம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது. பளிங்கு கற்காளால் ஆன இப்பீடத்தில் இடது புறத்தில், ஒரு சிறிய சன்னல் வைக்கப்பட்டுள்ளது. இச்சன்னலானது, அன்னையின் திருஓவியத்தை தாங்கி நிற்கும் பழமையான சுவரை காணும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது. அன்னையின் திருஓவியம் இரத்தம் சொரிந்தபோது அந்த இரத்தம் இச்சுவரிலும் படிந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மிகப்பாக்கியம் பெற்ற சுவராக இது பாதுகாக்கப்படுகிறது.

ஆலயமானது தொடர்ந்து பல்வேறு வளர்ச்சிகளை கண்டது. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கி.பி. 1809ஆம் ஆண்டு ஆலய முற்றமானது எழுப்பபட்டது. நான்கு பெரிய தூண்களுடன் எழுப்பட்ட இம்முற்றத்தில் லொரன்சோ பிரெத்தி என்கிற ஓவியரால் குதிரையில் பயணிக்கும் புனித மௌரிசியோ மற்றும் புனித ஜார்ஜ் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. மேலும், திருமுழுக்கு தொட்டியின் அருகில் திருமுழுக்கு யோவான் இயேசுவுக்கு திருமுழுக்கு தரும் ஓவியமும் இதே ஓவியரால் வரையப்பட்டுள்ளது.

19ஆம் நூற்றாண்டின் இறுதியானது, இத்திருத்தலத்தின் வரலாற்றின் முக்கிய மைல் கல்லாக அமைந்தது. அன்னையின் திருஇரத்தத்தின் ஓவியத்தின் புகழ் பரவ பரவ திருப்பயணிகளின் எண்ணிக்கையின் அதிகமானது. எனவே, ஒரு பெரிய ஆலயம் கட்ட



**பழைய ஆலயம்**

முடிவெடுக்கப்பட்டு, அதற்கான ஆயத்தப் பணிகள் தொடங்கின. அத்தகைய பணிகளை தொடங்கியவர் ஜியோவான்னி அந்தோணியோ பெரத்தி (1849-1929) ஆவர். ஆவரின் பெருமுயற்சிகள் தொடங்கி எழுப்பப்பட்ட அன்னையின் திருத்தலக் கோவிலை பற்றிய வரலாற்றை அடுத்த தொடரில் காண்போம்.



**புனித மௌரிசியோ**

திருப்பயணம் தொடரும்...........





# மாதா மன்றாட்டு மாலை



12

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## ஆச்சரியத்துக்குரிய மாதாவே

மனிதன் மண்ணிலே பிறந்து பல நாட்கள் ஆன பின்புதான் நடை பயில்கின்றான். ஆனால் விலங்குகள் மண்ணில் விழுந்ததும் வீறுகொண்டெழுகின்றன. ஆனால் தற்போதைய நவீன உலகில் வயிற்றில் இருக்கும் சிசுவுக்கே பாடம் சொல்லிக் கொடுத்து அது பிறந்து மண் தொட்டதும் விண்ணுக்கு அனுப்புங்கள் என்று கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கற்களில் உருண்டு ஓடத் தொடங்கிய மனித வாழ்வு, இன்று கரண்டில் (மின்சாரத்தில்) ஊடுருவிச் செல்கிறது. மின்சார உலகமாக மாறிவிட்டது. (Email, E Book) ஒவ்வொரு நிமிடமும் அதிசயங்கள் நிகழ்கின்றன. கைகள் இல்லாதவன் கண் இமையால் எழுதுகிறான். கால்கள் இல்லாதவன் மலை ஏறுகிறான். கணவன் மனைவி இல்லாமல் குழந்தைகள் உருவாக்கப்படுகின்றன. ஆனால் தொழில்நுட்ப வளர்ச்சியால், இத்தகைய வினோதங்கள் நடைபெறுவதில் ஆச்சரியமில்லை.

ஆனால் எந்த முன்னேற்றமும் இல்லாத சாதாரண கல்வி அறிவு அற்ற பெண் ஒருவர் யூத சமுதாயத்தில் ஆச்சரியம் நிகழ்த்தியுள்ளார். பெண்களை துச்சமாக கருதிய யூத சமுதாயத்தில் பெண் ஒருவர் பாவக்கறை இல்லாமல் தெய்வத்திற்கு தாயாவதாக முடிவெடுத்து ஈடு இணையற்ற சாதனைக்குச் சொந்தக்காரியானதுதான் நம் ஆச்சரியத்தின் தாய் அன்னை மரியா.

வெறுமையில் இருந்து உலகை உருவாக்கிய தெய்வம், பெண்ணில் மனிதனாக உருவெடுப்பார் என்றதும் யூத சமுதாயமே ஆச்சரியத்தில் வியந்து நின்றது. மாட மாளிகைகளில் தவழ்ந்த மங்கைகள் மனதில் நிலைத்திருக்க வேண்டும். அரசர்களுக்கெல்லாம் அரசர் வசதியான அரியணையில் எங்கள் கருவறையில்தான் பிறப்பார். இளம் யூதப் பெண்கள் அனைவரும் தங்கள் மடிதிறந்து எங்கள்



## முத்திபேறு செசிலியா யேசெபி

**O S M**



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

நமது செசிலியா 1910 ஆம் ஆண்டு பிப்ரவரி 17 ஆம் நாள் மோந்தே ரோமனோ என்கிற சிறிய ஊரில் 11 வது மகளாக ஒரு ஏழை குடும்பத்தில் பிறந்தார். இவர் பிறந்த 45 வது நாளில் இவரது தந்தை காலமானார். எனவே, இவருடைய தாயார், தன்னுடைய அண்ணன் வேலை செய்து கொண்டிருந்த நேபி என்கிற ஊருக்கு வந்து, தன் குழந்தைகளுடன் குடியேறினார். செசிலியாவின் மாமா இவர்கள் அனைவரையும் தன் சொந்த குழந்தைகள் போல கவனித்துக் கொண்டார். செசிலியா தனது ஆறாவது வயதிலேயே, கல்வியை கற்க கன்னியர்கள் மடத்திற்கு அனுப்பப் பட்டார். அங்குதான் மரியின் ஊழியர் குடும்பத்தையும், அதன் ஆன்மிகத்தையும் பற்றி அறிந்து கொண்டார். தானும் ஒரு மரியின் ஊழியர் கன்னியாக மாற வேண்டும் என்று உறுதியான முடிவை எடுத்தார். 1922 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் நாள் மரியின் ஊழியர் சபையின் மூன்றாம் சபையில் சேர்ந்தார். இந்த நாளில் அவள் அடைந்த மகிழ்ச்சியை, தனது முதல் நற்கருணை உண்ட நாளோடு ஒப்பிட்டு தனது குறிப்புகளில் எழுதியுள்ளார். 1923 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் காச நோயால் பாதிக்கப்பட்டார். எனவே, கன்னியர் மடத்திலிருந்து வீட்டிற்கு அனுப்பப்பட்டார். இதனால், அவருடைய படிப்பு தடை பட்டது. இருந்தாலும், தனது உடலை சரி செய்து கொண்டே, பங்கு பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். குழந்தைகளுக்கு மறைக்கல்வி கற்ப்பிப்பது, போன்ற பணிகளை செய்தார். உடல் நலம் பெற்றவுடன், நவம்பர் மாதம் 1923 ல் பிஸ்தோய நகரை மையமாக கொண்ட மரியின் ஊழியர் கன்னியர் சபையில் சேர்ந்தார். 1926 ஆம் ஆண்டு வரை எல்லாம் நன்றாக சென்று கொண்டிருந்த வேளையில், அவருக்கு மறுபடியும் காச நோய் வந்தது. எனவே, மடத்திலிருந்து மீண்டும் வீடு திரும்ப வேண்டிய சூழ்நிலை உருவானது. இது அவளுக்கு மிகவும் சோகத்தை தந்தது. இருந்தாலும், இயேசுவின் மீது உள்ள அன்பு குறையவே இல்லை. என் மனதில் என்றோ, என்னை ஏசுவுக்கு அர்ப்பணித்து விட்டேன், நான் என்றும் அவருக்குரியவள், என்று பெருமிதத்துடன் கூறினாள். இந்த கடினமான தருணத்தில், மரியின் ஊழியர் குருவான கபிரியேல் செசிலியை சந்தித்தார், பின்னர் அவளின் தனது ஆன்மீககுருவாக மாறி அவளை வழிநடத்தினார். அவரது வேண்டுகோளின் பேரில் அவர் தனது சுயசரிதையை எழுதினார் நமது செசிலி. இதற்க்கு ஒரு கோமாளி மற்றும் ஒரு நாட்குறிப்பின் கதை என்று பெயரிட்டார். இந்த தலைப்புக்கான காரணங்கள் அவளுடைய சுயசரிதையில் உள்ளன. அவற்றில் மிக முக்கியமாக காரணம், அவள் இயேசுவின் கையில் ஒரு உண்மையான கோமாளி என்று தன்னை கருதினாள். பல உடல் நோய்களுக்கு மத்தியிலும் இன்முகத்தோடும் அன்போடும் வாழ்ந்து 1928 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ஆம் நாள் தனது 18 ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். 2010 ஆம் ஆண்டு திருத்தந்தை 16 ஆம் ஆசிர்வாதப்பர் வணக்கத்துக்குரியவர் என்றும், 2012 ஆம் ஆண்டு முத்திப்பேறு பெற்றவர் என்றும் அறிவித்தார்.





29-ம் பக்க தொடர்ச்சி

நற்செய்தியாளர்கள் அறிவித்துள்ளதை தியானிக்கிறோம் 4வது 10 மணி ரகசியமும் 5வது 10 மணி ரகசியமும் கத்தோலிக்க கிறிஸ்தவ பாரம்பரிய விசுவாசத்தின் அடிப்படையில் மரியாவின் விண்ணேற்பு அடைந்ததையும் விண்ணக மண்ணக அரசியாக முடி சூட்டப்பட்ட நிகழ்வுகளையும் நாம் தியானிக்கிறோம். இவ்வாறாக நற்செய்தியின் பெரும் பகுதியை தியானிக்கும் மாபெரும் வாய்ப்பை ஜெபமாலை பக்தி முயற்சி நமக்கு தருகிறது. 1917 –ல் பாத்திமாவில் அன்னை மரியா 3 சிறுவர்களுக்கு (லூசி, ஃபிரான்சிஸ், ஜெசிந்தா) மே 13 முதல் அக்டோபர் 13 வரை ஆறு முறை காட்சி அளித்தார்.

அக்காட்சியின்போது உலகில் சமாதானம் நிலவிடவும் போர் வராமல் இருக்கவும் தினமும் ஜெபமாலை சொல்ல வேண்டும் என்றும் ஒவ்வொரு 10 மணி ஜெபம் சொல்லி முடித்தவுடன் “ஓ என் இயேசுவே” என்ற மன்றாட்டையும் சொல்ல வேண்டும் என்று கூறி இருக்கிறார் எல்லா வித துன்ப சூழல்களில் இருந்து நம்மை மீட்பதும், அந்த சூழ்நிலைகளுக்கு ஒரு பரிகாரம் ஆவதும் செபமாலையே என்றும் கூடி ஜெபிக்கும் குடும்பம் இம்மண்ணுலகின் சுவர்க்கமாகும் என்றும் புனித அன்னை தெரசா கூறி இருக்கிறார்.

துன்பங்களும் பிரச்சனைகளும் வரும்போது மட்டும் செபமாலை கையில் எடுத்தால் போதாது தினமும் தவறாமல் ஜெபமாலை சொல்லி வந்தால் எந்த துன்பமோ பிரச்சனையோ வராது அப்படியே வந்தாலும் அதை எதிர்க்கும் சக்தியை அன்னை மரியா நமக்கு பெற்று தருவார் என்பதில் ஐயம் இல்லை. முற்காலங்களில் ஒவ்வொரு வீட்டிலும் குடும்பத்தார் அனைவரும் ஒன்றாக கூடி ஜெபிப்பர். அவர்களது ஜெபத்தில் நிச்சயமாக ஜெபமாலை பக்தி முயற்சியும் இருக்கும் “பரலோகத்திலிருக்கிற, அருள் நிறைந்த மரியே வாழ்க” என்ற மன்றாட்டுக்களின் முன்பகுதியை ஒருவர் தொடங்க பின் பகுதியை மற்றவர்கள் சொல்லி முடிப்பார்கள். அவர்கள் அதை ராகமாக பாடுவதில்லை. ஆனாலும் அந்த வார்த்தைகளில் ராகமும் தாளமும் இருப்பது போன்ற உணர்வு கேட்பவர்கள் உணருவர்.

இன்றைய காலத்தில் பல குடும்பங்களில் இறை வேண்டுதலே இல்லை, இருந்தாலும் ஜெபமாலை பக்தி இல்லை. பிள்ளைகளுக்கு எப்படி ஜெபமாலையை கையில் பிடிப்பதென்றே தெரியவில்லை. ஒவ்வொரு குடும்பங்களிலும் பெரியவர்கள் ஜெபமாலை செய்வதை பழக்கமாக கொள்ள வேண்டும், பிள்ளைகளுக்கும் கற்று கொடுக்க வேண்டும். தாவீது கோலியாத்தை எதிர்க்க வழுவழுப்பான 5 கூழாங்கற்களை கையில் எடுத்ததுபோல (1 சாமு 17:40) நாமும் தீய சக்திகளை எதிர்த்து போராட வழுவழுப்பான 5 பத்து மணிகளை கையில் எடுப்போம்.

பிராத்தனை சமயங்களிலாவது விவிலிய வசனங்களை வாயினால் அறிக்கை இடுவோம். நமக்கு எவ்வளவு செல்வங்கள், நகைக், துணிகள் இருந்தாலும் நாம் இறந்தபின் நம் கைகளில் வைக்கப்படுவது ஜெபமாலையும் சிலுவையும்தான். அதை நம் கைகளில் வைக்கப்படுவதற்குள்ள தகுதியை நாம் உயிருடன் இருக்கும்போதே பெற்றுக் கொள்ள நம்மால் ஆன முயற்சிகளை செய்வோம். கிறிஸ்துவின் அனைத்து மறையுண்மைகளையும் எடுத்துரைப்பது ஜெபமாலை என்றார் புனித திருத்தந்தை 23-ம் யோவான். ஏழைகள், பாமர மக்கள், படிப்பறிவற்ற மக்கள் அனைவரின் விவிலியம் ஜெபமாலை ஆகும்.

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## I அரசர்கள்



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | 2 |
| | 5 | | | | | | | 6 | |
| | | 9 | | | | | X | | |
| | | | 12 | | | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | | | 11 | | | |
| | | | | | | | 10 | | |
| | 7 | | | | | | | 8 | |
| 4 | | | | | | | | | 3 |

**வலமிருந்து இடம்**

2) மறுமொழி வந்து சேர்ந்த நேரத்தில் பெனதாது மற்ற மனன்ர்களோடு மது அருந்திக்கொண்டிருந்தான். அதைக் கேட்டு அவன் தம் அலுவலரை நோக்கி, போரிடத் தயாராகுங்கள் என்றான். அவர்களும் நகருக்கு எதிராகப் போரிடத் ..........

3) எலியா சிறுவனைத் தூக்கிக் கொண்டு மாடி அறையிலிருந்து .............. வீட்டிற்குள் வந்து, இதோ! உன் மகன் உயிருடன் இருக்கிறான் என்று கூறி அவனை அவன் தாயிடம் ஒப்படைத்தார்.

6) அப்பொழுது அந்த முதிய இறைவாக்கினர் இறையடியாரின் சடலத்தை எடுத்துக் கழுதையின்மேல் ஏற்றி, துக்கம் கொண்டாடவும் அதை ............ செய்யவும் தம் ஊருக்குக் கொண்டு வந்தார்.

8) ............... இஸ்ரயேல் மக்களுள் ஒருவரையும் சாலமோன் அடிமையாக்கவில்லை: அவர்கள் போர்வீரர், மெய்க்காப்பாளர், மேற்பார்வையாளர், படைத்தலைவர், தேர்ப்படைவீரர், குதிரைப்படை வீரர் ஆகியோராய் அமர்த்தப்பட்டனர்.

10) சாலமோன் தம் ............. முழுவதையும் கட்டி முடிக்கப் பதின்மூன்று ஆண்டுகள் ஆயின.

11) ஏனெனில் என் தலைவராகிய ஆண்டவரே! நீர் எம் மூதாதையரை எதிப்திலிருந்து .......... வந்தபோது, உம் ஊழியர் மோசேயைக் கொண்டு நீர் சொன்னபடியே செய்திருக்கிறீர்!

**இடமிருந்து வலம்**

1) அதற்கு மீக்காயா, ........... மேல் ஆணை! ஆண்டவர் என்னிடம் சொல்வதையே நான் உரைப்பேன் என்றார்.

4) பாசாவைச் சார்ந்தவருள் நகரில் மடிபவர் நாய்களுக்கு இரையாவர்: வயல்வெளியில் ......... வானத்துப் பறவைகளுக்கு இரையாவர்.

5) ............... ஆண்ட காலமெல்லாம் அவனுக்கும் எரொபவாமுக்குமிடையே தொடர்ந்து போர் நடந்து நந்தது.





இழந்த இஸ்ரயேல் மக்களுக்கு இறைவனின் விடுதலைச் செய்தியை இறைவாக்கினர் எரேமியா கொண்டு வருகிறார். இன்றும் பல காரணங்களால் நம்பிக்கை இழந்து வாடும் நமக்கு, நம்பிக்கையும் ஆறுதலும் தருகின்ற இவ்விறைவார்த்தைக்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இன்றைய இரண்டாம் வாசகம் கிறிஸ்துவின் தியாக அன்பு அவரது பணியோடு நெருங்கிய உறவு கொண்டுள்ளதை உணர்த்துகின்றது. மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்து பணி செய்த இயேசு அந்தப் பணியின் உச்சகட்டமாகத்தான் தன்னையே பலியாக ஒப்படைத்தார். இயேசுவின் வாழ்க்கைப் பின்னணியில் பிறருக்குப் பணிபுரிவதன் உச்சக்கட்டமே தன்னைப் பலியாக்குவது என்று புரிந்து கொள்வது அவசியம். ஆகவே கிறிஸ்துவை பின்பற்றி அவரைப்போல நாமும் பிறருக்காக நம்மையே தியாக பலியாக ஒப்புக் கொடுப்போம் அதன் வழியாக நமது விசுவாச வாழ்வின் முழுமையை அடைவோம்.

**மன்றாட்டுக்கள்**

1 மாபெரும் செயல்களை புரிபவரே உம் மக்களாகிய நாங்கள் தீய செயல்களினால் பார்வையற்று வாழ்கிறோம். பார்வையற்ற பார்த்திமேயு பார்வைப் பெற்றதைப் போல நாங்களும் பார்வை பெற அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, திருஅவையை நன்முறையில் வழிநடத்தும் உம் ஊழியர்களை நிறைவாக ஆசீர்வதியும். மேலும் அவர்கள் திருஅவையை நன்முறையில் வழிநடத்த அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, நாங்கள் அறியாமையினால் நெறிதவறி வாழ்கிறோம். உமது அன்பினை உணர்ந்தவர்களாய் நல்நெறியில் பயணிக்க அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, எமது பங்கிலுள்ள இளையோர்களை உம் கரத்தில் தருகின்றோம். உம்மையும் உமது அன்பினையும் புறக்கணிக்காதவர்களாய் நன்முறையில் வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா, வேலையில்லாமல் அன்றாட தேவைகளுக்கு அவதிப்படுகின்ற மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து நல் வேலைவாய்ப்பைக் கொடுத்து அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அனைத்திற்கும் முதலானவரே இறைவா, நாட்டை ஆட்சி செய்கின்ற தலைவர்கள், தான் என்ற ஆணவத்தினால் தன்னலம் கருதாமல் மக்கள் நலம் கருதி நல்லாட்சி புரிய அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் பிறப்பிடமே இறைவா, நான்தான் அனைத்திற்கும் தலைவன் என்று பிறரின் துன்பங்களைக் கண்டு சிரித்து வாழும் மக்களாக வாழாமல் பிறரின் துன்பங்களைக் காணும்போது உதவி செய்யும் மக்களாக எங்களை வழிநடத்த தேவையான அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலத்தின் 30-ம் ஞாயிறு (27.10.2024)

**எரே 31:7-9 எபி 5: 1-6 மாற் 10: 46-52**

**முன்னுரை**

கண்கள் நமது மனதின் கதவுகள். இந்த உலகை முழுமையாக பார்ப்பதற்கும், உலகில் உள்ள வண்ணங்களையும் வடிவங்களையும் ரசிப்பதற்கு கண்கள் மட்டும் இல்லையென்றால் உலகம் சூனியம்தான். அப்படிப்பட்ட இருண்ட நிலைக்குத் தள்ளப்பட்டவன்தான் இன்றைய நற்செய்தியில் பேசப்படுகின்ற பார்வை இழந்த பர்த்திமேயு, அதே சமயத்தில் இறைவனின் கருணையை இரக்கத்தை நம்புகிறவன் நலம் பெறுகிறான் என்பதையும் மறுக்க முடியாது.

தான் வழியோர பிச்சைக்காரன், உரிமைகளை இழந்தவன், சமூகத்தில் ஒதுக்கப்பட்டவன் என்று அவநம்பிக்கை கொள்ளாது வலைகளை விட்டுவிட்டு வந்த சீமோன் அந்திரேயா போல தந்தையை விட்டுவிட்டு வந்த யாகப்பர் யோவான் போல சுங்கத்துறையை விட்டுவிட்டு வந்த மத்தேயுவைப் போல தனது ஒரு சொத்தாக பாதுகாப்பாக இருந்த மேலாடையைத் தூக்கி எறிந்து விட்டு முழுமூச்சுடன் விசாலமானப் பார்வையுடன் இயேசுவிடம் ஓடி வருகிறான். இயேசுவின் கருணை உள்ளமும், அவனின் இடைவிடாத விசுவாசமும் விடாமுயற்சியும் புதிய விடியலாகிறது. பார்வை பெற்ற அவன் இயேசுவை பின் தொடர்ந்தது மட்டுமல்ல அவரது நற்செய்தியின் தூதுவனாக மாறுகிறான். நாமும் அப்பார்வையற்ற மனிதரைப் போல நமது அவநம்பிக்கை என்னும் மேலாடையை களைந்துவிட்டு நம்பிக்கையோடும் விடா முயற்சியோடும் இயேசுவை நாடுவோம் அவரது இரக்கத்தையும் கருணையையும் பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

பலவிதமான துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த இஸ்ரயேல் மக்களை மீட்க ஆண்டவர் வருகின்றார் என்பதை இன்றைய முதல் வாசகம் சுட்டிக் காட்டுகின்றது. இங்கே கடவுள் இஸ்ரயேல் மக்களோடும் செய்து கொண்ட உடன்பாட்டு உறவினால் அவர் அவர்களின் தந்தையாகின்றார். இறைவன் தங்களை இன்னல்களுக்கும் இடற்பாடுகளுக்கும் மத்தியிலும் உழலவிட்டுவிட்டாரே என்று நம்பிக்கை





7) அவர் உண்டு வந்த உணவு வகைகள், அவருடைய அலுவலரின் வரிசைகள், பணியாளர்களின் சுறுசுறுப்பு. அவர்களுடைய சீருடை பானம் பரிமாறுவோரின் திறமை ஆண்டவரின் .........அவா செலுத்திய எரிபலிகள் ஆகியவற்றைக் கண்டு பேச்சற்றுப் போனார்.

9) கடவுள் .............. நிடிய ஆயளையோ, செல்வத்தையோ நீ கேட்கவில்லை. உன் எதிரிகளின் சாவையும் நீ விரும்பவில்லை. மாறாக, நீதி வழங்கத் தேவையான ஞானத்தை மட்டுமே கேட்டிருக்கிறாய்.

12) யோவாபும் இஸ்ரயேலர் ............. அங்கு ஆறு மாதம் தங்கியிருந்து ஏதோமிலிருந்த எல்லா ஆண்களையும் வெட்டி வீழ்த்தினர்.

**மேலிருந்து கீழ்**

1) நாபோத்து இறந்துபோனதை ............. கேட்டு, இஸ்ரியேலனாகிய நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை உடைமையாக்கிக் கொள்ளப் புறப்பட்டுப் போனான்.

2) அவர் கண் விழித்துப் பார்க்கையில் இதோ! தணலில் சுட்ட ஒரு அப்பமும் ஒரு குவளையில் தண்ணீரும் தம் ............ இருக்கக் கண்டார். அவற்றை அவர் உண்டு பருகியபின் திரும்பவும் படுத்துக் கொண்டார்.

5) ஆண்டவர் அகியாவிடம், இதோ! எரொபவாமின் மனைவி நோயுற்றிருக்கிற தன் மகனைப் பற்றி உன்னிடம் கேட்க வருகிறாள். நான் கூறும் வண்ணம் நீ ............ பேச வேண்டும். அவள் மாறுவேடத்தில் வருகிறாள் என்றார்.

6) ரெகபெயாம் செக்கேமுக்குச் சென்றான். ஏனெனில் அங்கு இஸ்ரயேலர் ............ அவனை அரசனாக்குவதற்காக ஒன்று கூடியிருந்தனர்.

9) ஆகையால் ஆண்டவர் என் தந்தை தாவீதை நோக்கி, உனக்குப் பின் உன் அரியணையில் நான் ............ உன் மகனே என் பெயருக்குக் கோவில் கட்டுவான் என்று சொன்னபடியே என் கடவுளாகிய ஆண்டவரின் பெயருக்குக் கோவில் எழுப்ப எண்ணியுள்ளேன்.

12) சாலமோனுக்கு எழுநூறு அரசகுலப் பெண்கள் மனைவியராகவும் முந்நூறு பெண்கள் வைப்பாட்டிகளாகவும் இருந்தார்கள். அப்பெண்கள் ............இதயத்தைத் தவறான வழியில் திருப்பி விட்டார்கள்

**கீழிருந்து மேல்**

3) இப்போதே ஆளனுப்பி ........... மக்கள் அனைவரையும் கர்மேல் மலையில் என் முன்னிலையில் உணவருந்தும் பாகாலின் நானூற்றைம்பது பொய்வாக்கினரையும் அசேராவின் நானூறு பொய்வாக்கினரையும் கொண்டு வந்துசேர், என்றார்.

4) அங்கே இருந்தவர்கள் அரசரிடம், ........... நாத்தான் இங்கு வந்திருக்கிறார் என்றார்கள். அவர் உள்ளே நுழைந்து அரசர்முன் சென்று தரைமட்டும் பணிந்து வணங்கினார்.

7) ஆண்டவர் சாலமோன்மீது சினமுற்றார். ஏனெனில் தமக்கு இருமுறை காட்சியளித்திருந்த இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரிடமிருந்து அவர் ............ விலகிச் சென்றது.

8) பகுரிம் ஊரைச் சார்ந்த பென்யமினனாகிய கேராவின் மகன் சிமயி உன்னோடு இருக்கிறான் அல்லவா? அவன், மகனயிமுக்கு நான் சென்றபோது மிகவும் இழிவான முறையில் பேசி என்னைச் சபித்தான். ............ யோர்தானுக்கு அருகில் என்னைச் சந்திக்க வந்தபோது உன்னை வாளால் கொல்லமாட்டேன் என்று ஆண்டவர்மேல் ஆணையிட்டு அவனுக்கு நான் சொன்னேன்.

10) கருவறை இருபது முழ நீளமும், இருபது முழ ........... இருபது முழ உயரமுமாய் இருந்தது. அவர் அதனைப் பசும்பொன் தகடுகளால் மூடினார். பீடத்தையும் கேதுருப் பலகைகளால் மூடினார்.

11) அதற்கிணங்க, அவர்கள்............. ஏழாம் மாதமாகிய 'ஏத்தானியம்' மாதத்தின் பண்டிகையின் போது, அரசர் சாலமோன் முன் கூடினர்

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-10-2024

# செபமாலை என்ன தரும்? 17

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி



வெற்றி வாகைகள் பெற்றுத் தரும்
தோல்வியில் துவளாமை கற்றுத் தரும்
அருளும் வளமும் அள்ளித் தரும்
பண்பும் பாசமும் சொல்லித் தரும்
நீதி நேர்மை ஏற்கச் செய்யும்
அநீதி ஆணவம் எதிர்க்கச் செய்யும்
உண்மை உழைப்பில் நிற்கச் செய்யும்
ஆபத்தில் உதவிட குதிக்கச் செய்யும்
கோபம் தாபம் விட்டுத் தள்ளும்
வன்மம் வஞ்சகம் சுட்டுத் தள்ளும்
தீய செயல்களை விலகிச் செல்லும்
தூயவன் இயேசுவிடம் இணங்கிச் செல்லும்
முகவரி எண்ணாமல் அன்பு செய்யும்
பகைவரே என்றாலும் நன்மை செய்யும்
உறவுகள் நட்புகள் களிக்கச் செய்யும்
உருப்படியான காரியங்கள் பலிக்கச் செய்யும்
பேதமை பகைமை விலக்கி விடும்
பேய்ப் படைகளை விரட்டி விடும்
நோய் நொடிகளை நீக்கி விடும்
வீண் பழிகளை போக்கி விடும்
வேண்டுமென யாவையும் பெற்றுத் தரும்
வேண்டாதன யாவையும் ஒதுக்கி விடும்
இழந்தவை யாவையும் மீட்டுத் தரும்
விழுந்தவனை மீண்டும் தூக்கி விடும்
பஞ்சம் பட்டினி பறக்க விடும்
நெஞ்சம் இறைவனில் மிதக்க விடும்
சோதனை சாதனை ஆக்கி விடும்
வேதனை தீயினை பொசுக்கி விடும்
அறிவு ஆற்றலை பெருக்கி விடும்
அழிவு பாதையை ஒதுக்கி விடும்
ஆன்மீக வாழ்வுக்கு பழக்கி விடும்
அன்றாடம் கடமையை முடுக்கி விடும்
கிறிஸ்துவின் சாட்சியம் பகிரச் செய்யும்
கிறிஸ்துவின் சீடனாய் மகிழச் செய்யும்
கிறிஸ்துவின் இணைந்து திகழச் செய்யும்
கிறிஸ்துவாகவே மாறிட உதவி செய்யும்





தொண்டனாக பணியாளராக வாழ்வதில்தான் உண்மையான தலைமைப் பண்பு அடங்கியுள்ளது என்று சுட்டிக் காண்பிப்பதோடு இல்லாமல் அதைத் தன்னுடைய சீடர்களின் பாதங்களைக் கழுவியதன் மூலம் எண்பித்துக் காட்டினார் இயேசு.

பதவி மோகம், பண ஆசை நிறைந்த உலகில் ஒரு பணியாளனின் நிலைப்பாடு எப்படிப்பட்டதாக அமைய வேண்டும் என்பதற்கு இயேசுவே சிறந்த அடையாளம். பணிவிடை புரிவது என்பது மற்றவர்களின் சுமைகளைப் பகிர்ந்து கொள்வதிலும், தாழ்ச்சியோடு ஆறுதல் சொல்வதிலும்தான் அடங்கியுள்ளது என்பதை உணர்வோம்.

**முதல் வாசக முன்னுரை**

இறைவாக்கினர் எசாயா கிறிஸ்துவை துன்புறும் ஊழியனாகக் காட்டுகிறார். கிறிஸ்து பணிவிடையின் அடையாளமாகப் பலருடைய பாவங்களுக்காகத் தம்மைப் பரிகாரப் பலியாக்கினார். ஆனால் இறுதியில் உயர்வடைந்து தமது வாழ்வின் நிறைவை எய்தினார். சிலுவை அவரை வீழ்த்தவில்லை மாறாக சிலுவையைக் கொண்டே பாவத்தையும் பாவத்திற்குக் காரணமான அலகையையும் வீழ்த்தினார். தன்னையே வெறுமையாக்குகின்ற தலைவனால் மட்டுமே துன்புறுவோரின் துயரத்தை துடைக்க முடியும். பதவியை பகிர்ந்துக் கொள்ள முடியும், பணிவிடைப் புரிய முடியும், சேவையில் நிலைத்திருக்க முடியும்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இன்றைய இரண்டாம் வாசகத்தில் தலைமைக் குருவான இயேசு எல்லாவற்றிற்கும் மேலானவர். இருப்பினும் நாம் வாழ்வு பெறும் பொருட்டு அவர் எல்லா துன்பங்களையும் துயரங்களையும் ஏற்றுக் கொண்டார். மெசியாவின் தலைமைத்துவம் அரசாட்சியை அடிப்படையாக கொண்ட தலைமைத்துவம் அல்ல, மாறாக பணியாளரை அடிப்படையாகக் கொண்ட தலைமைத்துவமாக இருக்கின்றது. இயேசு வாழ்ந்து காட்டிய அவரது படிப்பினைகளை வாழ்ந்து சிறந்த தலைமைத்துவ பண்பை நம்மில் வளர்க்க முயலுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1 எங்கள் ஆயரே இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உம்மைப் போல் நல்லாயர்களாய் மக்களை ஒருங்கிணைத்து அன்பின் வழியில் வழிநடத்த அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 வாழ்வளிக்கும் இறைவா, நீர் மக்களை பஞ்சத்திலிருந்து விடுவித்து வாழ்வளிக்கின்றவராக இருக்கிறீர். நாட்டில் வறுமையினால் பரிதவிக்கும் மக்களை அரவணைத்து வாழ்வளிக்க அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 ஆறுதல் அளிப்பவரே எம் இறைவா, உமது மக்கள் கொடிய நோய்கள், கடன் பாரங்கள் போன்ற பல்வேறு துன்பங்களுக்கு உட்பட்டு மன அமைதி இல்லாமல் தவிக்கின்றார்கள். அவர்கள் துன்பங்களிலிருந்து விடுபட நீரே ஆறுதலாக இருக்க அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உலக செல்வங்களுக்கும் உலக இன்பங்களுக்கும் அடிமைகளாக மாறாமல் இறைவார்த்தையிலும், இறைபிரசன்னத்திலும் மட்டுமே பற்று கொண்டு வாழ்ந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, சட்டங்களை உருவாக்குகின்றவர்களும் நீதியை மக்களுக்கு வழங்குகின்றவர்களும் சாலமோன் கொண்ட ஞானத்தை பெற்று உண்மையும், நீதியும், இரக்கமும், பரிவும் கொண்ட சட்டங்களை வகுக்கவும் நீதியை வழங்கிடவும் அவர்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, நாங்கள் கொண்டுள்ள உலக செல்வங்கள் நீர் எங்களுக்கு வழங்கிய கொடைகள் என்பதை உணர்ந்து சுயநலம் விடுத்து, இருப்பதை இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழும் தாராள குணத்தை எங்களுக்கு அளித்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் எல்லா சூழ்நிலைகளிலும் உமது வாத்தையை தவறாது வாசித்து தியானித்து மன ஆறுதலும் மன திடமும் விசுவாச உறுதியோடு பெற அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா, இவ்வுலக வாழ்வு மாயை என்பதை உணர்ந்து எங்களது கிறிஸ்தவ அனுதின வாழ்வில் உமது மதிப்பீடுகளையும் உமது அரசையும் மட்டுமே தேடும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலத்தின் 29-ம் ஞாயிறு (20.10.2024)**
**எசா 53: 10-11 எபி 4: 14-16 மாற் 10: 35-45**

**முன்னுரை**

இன்றைய உலகில் மனித உறவுகள் சிதைக்கப்பட காரணம் பணிவிடைப் புரிவதைவிட பெறவே அதிகம் விரும்புகிறார்கள். அவனைவிட நான் பெரியவன், அதிகம் படித்தவன், மேலானவன், பணக்காரன், திறமையானவன், அழகானவன் என்ற மனநிலை குழந்தைப் பருவத்திலிருந்தே வளர்ந்து கொண்டிருக்கிறது. அதிகாரம், பதவி மோகம், அரசியலில் மட்டுமல்ல, குடும்பங்களிலும், ஆன்மீகத்திலும் வேரூன்றத் தொடங்கிவிட்டது. இத்தகைய சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு ஓர் ஊழியனாக தொண்டனாக வாழ இறைவன் அழைப்பு விடுக்கின்றது.

பதவி மோகம் கொண்டு பிறரை அடக்கி ஆள நினைக்கும் சிந்தனையில் விழுந்து விடாமல் விழிப்பாக இருக்க வேண்டியதன் அவசியத்தை இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. பெரியவர்களாக, முதன்மையானவர்களாக அல்லாமல்





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.

**பொதுக்காலம் 27 ஆம் ஞாயிறு (06.10.2024)**
**தொ.நூ 2:18-24 எபி 2:9-11 மாற் 10:2-16**

**முன்னுரை**

திருமணம் என்பது ஆங்கிலேயர்களுக்கு ஒரு கடமை. பிரெஞ்சுக்காரர்களுக்கு நல்ல சமையலை ருசி பார்க்க வழி. ரஷ்யர்களுக்கு துன்பத்தை பகிர்ந்து கொள்ள வழி. ஹாலிவுட்காரர்களுக்கு விவாகரத்து செய்ய ஒரு வாய்ப்பு என்று வேடிக்கையாக சொல்வதுண்டு. இன்றைய இறைவார்த்தை வழிபாடு திருமணம் மற்றும் குடும்ப வாழ்வைப்பற்றி பேசுகின்றன. குடும்பம் தனிமனித சுதந்திரத்திற்குத் தடையாக இருப்பதாக இன்று ஒரு சிலரால் கருதப்படுகிறது. மற்றொரு நபரோடு இணைந்து காலமெல்லாம் வாழ்வது கடினமானதாக, கசப்பானதாகக் கருதப்படுகிறது. இப்படிப்பட்ட மற்றும் இதுபோன்ற பிரச்சனைகளுக்கும், வேறுபட்டக் கருத்துகளுக்கும் மத்தியிலும் திருஅவை குடும்ப அமைப்பை உயர்த்திப் பிடிக்கின்றது. குடும்ப அமைப்பிற்கு எதிரான விவாகரத்து, ஒப்பந்த கூட்டு வாழ்க்கை முதலியவற்றை கவலையுடன் பார்க்கின்றது. குடும்பத்தின் முக்கியத்துவத்தை இந்த சமூகத்திற்கு உணர்த்த எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சியும் மனித இனத்திற்கு செய்யப்படும் மாபெரும் சேவை என்கிறார் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர். கிறிஸ்து திருஅவையை அதன் நிறை குறைகளோடு ஏற்று அன்பு செய்வது போல குடும்பத்தில் ஒருவர் மற்றவரை நிறை குறைகளோடு ஏற்று அன்பு செய்ய வெண்டும். ஏனெனில் குடும்பம் என்பது ஒரு அழைத்தல் ஒரு திருவருட்சாதனம். எனவே ஒருவர் மற்றொருவருக்கு முழுமையான அன்பைச் செலுத்தி உண்மையுடனும், மகிழ்ச்சியுடனும் ஒருமித்த மனதுடனும் வாழ்ந்து அழைப்பின் முழுமையை அடைய இறையருள் வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகம் திருமணம் மற்றும் குடும்ப வாழ்வானது இறைவனின் திட்டத்தில் முக்கியமானது. இவ்வுலகில் மகிழ்ச்சியான வாழ்விற்கு குடும்ப வாழ்வே அடிப்படை என்பதை விளக்குகின்றது. கணவனும் மனைவியும் ஒரே உடலாய் இருக்கிறார்கள் அவர்களிடையே

சமத்துவம் நிலவ வேண்டும். அந்த சமத்துவம் அவர்கள் இறைவனின் அன்பின் சின்னங்கள் என்று ஒருவருக்கொருவர் எடுத்துச் சொல்வதாய் இருக்க வேண்டும் என்று கூறும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இன்றைய இரண்டாம் வாசகம் இயேசுவின் தியாக அன்பை பற்றி பேசுகின்றது. இறைவன் உலகின் மீது கொண்டுள்ள அன்பை வெளிக்காட்ட கிறிஸ்து தன்னையே பலியாக்கினார். இறைவன் மக்களோடு செய்த உடன்படிக்கையை நிறைவு செய்யும் உயரிய நோக்கோடு கிறிஸ்து சிலுவைச் சாவை ஏற்றார். அதேபோல் குடும்பம் என்கின்ற மிகப்பெரிய இறைவனது கொடையில் மகிழ்ச்சி கொண்டு வாழ்ந்திட தியாக அன்பில் நிலைத்திட அருள் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் திருஅவை என்னும் மிகப்பெரிய குடும்பத்தின் உறுப்பினர்களாகிய ஒவ்வொருவரும் தங்களது அழைப்புக்கு ஏற்ற வாழ்க்கை வாழ்ந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 படைப்பின் நாயகனே இறைவா, உமது சாயலில் படைத்த மனிதர்களின் தீயச் செயல்களையும் வஞ்சக எண்ணங்களையும் மாற்றி உமக்குரிய மக்களாக அவர்கள் வாழவேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 கருணையின் கடலே எம் இறைவா, இன்றைய உலகில் கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் காரணமாக விவாகரத்து தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அவர்களின் நல்வாழ்விற்காக மன ஒற்றுமையையும் மன அமைதியையும் கொடுத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 மீட்பின் நாயகனே எம் இறைவா, நீர் சிறிது காலம் வானதூதரை விடச் சற்றுத் தாழ்ந்தவராகவே வாழ்ந்தீரே. உம்மைப் போல நாங்களும் தாழ்ச்சி நிறைந்த குணமுடையவர்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 உமது பெயரை உன் சகோதர, சகோதரிகளுக்கு அறிவிப்பேன் என்று கூறிய இறைவா, உம்மைப் பற்றி அறியாத மக்களுக்கு உமது பெயரின் மேன்மையையும் மாட்சியையும் எடுத்துக் கூறும் மக்களாக எங்களை மாற்ற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்
.

**பொதுக்காலத்தின் 28-ம் ஞாயிறு (13.10.2024)**
**ச.ஞா 7:7-11 எபி 4:12-13 மாற் 10:17-30**

**முன்னுரை**

உலகம் முழுவதையும் ஒருவர் ஆதயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்க்கையை இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? இந்த இறைவார்த்தை எத்தனையோ சாமானிய மனிதர்களை புனிதர்களாக மாற்றியது. இத்தகைய சீடத்துவ வாழ்வை வாழ இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. இறையரசைப் பற்றிய ஆழமான கருத்துக்களை இன்றைய நற்செய்தி விளக்குகின்றது. இறையரசு என்பது பணத்தால், செல்வத்தால் கட்டப்படக்கூடியது அல்ல, மாறாக உறவுகளையும், மனித மனங்களையும், பகிர்வையும் இணைக்கின்ற உண்மைப் பாலம். பகிர்ந்து வாழும் மனநிலையே மனிதனை நிலை வாழ்வுக்கு அழைத்துச் செல்லும்.

செல்வர்களாக இருப்பது தவறல்ல. செல்வர்களை இயேசு வெறுக்கவும் இல்லை. மாறாக செல்வத்தை வைத்து பிறரை அடிமைப்படுத்துவது, அயலான் மீது அக்கறையில்லாமல் வாழ்வது இப்படிப்பட்டவர்களைத்தான் இயேசு எச்சரிக்கின்றார். செல்வம் பெருகினால் ஒருவனுக்கு வாழ்வு வந்துவிடாது. வாரி வழங்கினால் ஏழைகளுக்கு ஈந்தான் அப்படிப்பட்டவர்களின் ஈகை குணம் என்றென்றும் மறக்கப்படாது. இப்படிப்பட்ட மனநிலை கொண்டு வாழ இறைவன் நம்மை அழைக்கின்றார். மனிதனை மறந்தவன் கடவுளைத் தேடுகிறான். கடவுளை மறந்தவன் மனிதனைத் தேடுகிறான். இரண்டையும் தேடுகிறவன் வாழ்வை தமதாக்கிக் கொள்கிறான். இரண்டையும் மறந்தவன் பணத்தை மட்டுமே தேடுகிறான். இறுதியில் நிம்மதியை இழந்து விடுகிறான். பற்றற்ற வாழ்வே நிலைவாழ்வுக்கு இட்டுச் செல்லும் என்பதை உணர்ந்து இறைவனை தேடுவோம். அதன் நிறைவாய் விண்ணரசை தமதாக்கி கொள்வோம்.

**முதல் வாசக முன்னுரை**

மனித வாழ்வு அர்த்தம் பெற வேண்டுமானால் ஞானத்தை மட்டும் கேட்ட சாலமோனைப் போல நமது வேண்டுதல் அமைய வேண்டும். கிறிஸ்துவோடு உலக செல்வங்களை ஒப்பிடும்போது அச்செல்வங்கள் ஒன்றுமில்லை. இதைதான் புனித பவுல் கிறிஸ்துவை ஆதயமாக்கி கொள்ள உலக செல்வங்களை குப்பையெனக் கருதுகிறேன் என்கிறார். ஞானத்திற்கு ஈடு இணையானது இவ்வுலகில் வேறெதுவும் இல்லை. சாலமோன் அரசனைப் போல் நாமும் ஞானத்தையே கேட்போம். பகுத்தறிவு இறை ஞானமாகும்போது அது மனிதனை இறைவனில் சங்கமிக்கச் செய்கிறது.

**இரண்டாம் வாசக முன்னுரை**

பழைய ஏற்பாட்டில் ஞானமாக போற்றப்படுவது புதிய ஏற்பாட்டில் இறையரசு என இயேசு குறிப்பிடுகிறார். அவ்விறையரசை நமதாக்கி கொள்ள இறைவார்த்தை வாசித்து, வாசித்த வாத்தையை தியானித்து, தியானித்த வாத்தையை வாழ்வாக்க இன்றைய இரண்டாம் வாசகம் நமக்கு அழைப்பு விடுக்கின்றது. எல்லா உண்மைகளின் அளவில்லா ஊற்றாக இருப்பது விவிலியம் என்கிறார் தத்துவயியலாளர் இம்மானுவேல் காண்ட். இறையரசின் விழுமியங்களை இறைவார்த்தை வழியே அறிவோம்.